# Britto Voice

# மாற்றம் கண்டிட ..

குரல் -1 முழக்கம் -2




## De Britto Higher Secondary School, Devakottai

# பதிப்புரை

மனித வாழ்வில் மாற்றம் என்பது மகத்தானது. ஒரு சிலருக்கு நிகழ்ந்த மனமாற்றம் தான் புதுப்பொலிவுமிக்க வரலாற்று மாற்றங்களை இம்மண்ணில் நிகழ்த்தியிருக்கிறது. புனித இஞ்ஞாசியாரின் வாழ்வில் உடல் காயங்களிலிருந்து மீண்டு எழுவதற்கே பெருந்துயர்படுவார் என்றிருந்த நிலையைக்கடந்து இன்றைக்கு உலகையே கவரும் வண்ணம் ஆன்மீகத்துக்கு அடித்தளமிட்டு கல்விக்கண்ணை திறக்கவைத்த இவர் மாமனிதர் மட்டும் அல்ல உலகம் போற்றும் பெரும் புனிதராக வலம் வருகிறார். இவர் படித்துக் கொண்டிருந்த காலம் தொட்டே பிரான்சிஸ் சவேரியார் போன்ற புலமை மிக்கவர்களின் மனதில் புகுந்து மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

மாற்றம் என்பது தன் வாழ்வில் வந்து போகும் வெறும் வாழ்க்கை நிகழ்வல்ல. அது இறையாட்சியின் கனவைத் தனதாக்கி ஆன்மீகத்தனத்தைப் பாதையாக்கி தடம் பதிக்க புறப்படும் இலக்கின் எல்லை என்ற புரிதலைக் கொடுத்தவர்.

ஐந்நூறு ஆண்டுகள் கடந்தும் அவரின் மனமாற்ற நிகழ்வுகள் நம் நினைவில் இன்றும் நின்றுவென்று நிலைக்கிறதென்றால் அவர் விதைத்த ஆன்மீக விழுமியங்கள் இன்றும் நம்மைத் தொட்டுத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இறை அன்னையின் மீது கொண்ட அளவுகடந்த பற்றும் இயேசுவின் மீது எழுந்த விசுவாச நம்பிக்கையும் அன்று இயேசு சபை என்னும் உலகளாவிய சபையை நிறுவக் காரணமாயிற்று. புனித இஞ்ஞாசியாரின் மனமாற்றத்தால் எடுத்த பரிணாம விசுவாச உண்மைகளை இச்சபை பாரெங்கும் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது. அது இன்று மனிதம் காக்கும் மகத்தான புனித சபையாக மலர்ந்து நிற்பது இந்த யுகம் கண்ட வரலாற்றுச் சாதனைதான்.

இந்த 5:: ஆவது புனித இஞ்ஞாசியாரின் மனமாற்றத்தின் ஆண்டினை இதழாகத் தொகுக்கும் பொறுப்பாளர் அருட்சகோதரர் சாலமோன் ஜோசப் பிரவீன் சே.ச மற்றும் அனைத்து ஆசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் படைப்பாளர்களாகிய எம் பள்ளியின் முன்னாள் இந்நாள் ஆசிரியப் பெருமக்களுக்கும் எமது பள்ளியின் மாணவச் செல்வங்களுக்கும் எமது நெஞ்சம் நிறை நன்றிகளும் வாழ்த்துகளும்.

அன்பின் வாழ்த்துகளுடன்
அருட்பணி. பெ. ஆரோக்கியசாமி சே.ச.
தலைமையாசிரியர்
பதிப்பாசிரியர் – **Britto Voice**



# தலையங்கம்

புனித இஞ்ஞாசியாரின் மனமாற்றத்தை நான் மூன்று நிலைகளில் இருந்து பார்க்கிறேன்.

1. அழைப்பு (Invitation)
2. மறுபிறப்பு (Regeneration)
3. பதில்மொழி (Response)

புனித இஞ்ஞாசியாரின் மனமாற்றத்திற்கான அழைப்பு பாம்பலூனா கோட்டையில் கால் அடிபட்டு ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் தான் வாசித்த “இயேசுவின் வாழ்வு” மற்றும் “புனிதர்களின் வாழ்வு” என்னும் இந்த இரண்டு நூல்களிலிருந்து வந்தது.

இயேசுவின் வாழ்வும், புனிதர்களின் வாழ்வும் புனித இஞ்ஞாசியாரின் மனதினை மிகவும் ஆழமாகத் தொட்டது. இப்புத்தகங்கள் பல்வேறு கேள்விகளை இவருக்குத் தந்தன. புனித டோமினிக், புனித பிரான்சிஸ் இவர்களால் இறைவனுக்காக செய்யமுடிந்ததை ஏன் என்னால் செய்ய இயலாதா? என்ற கேள்விதான் இவரது மறுபிறப்பிற்கு வித்தாக அமைந்தது.

புனித இஞ்ஞாசியாருக்குக் கிடைத்த அழைப்பிற்கும், மறுபிறப்பிற்கும் அவர்தந்த பதில்மொழிதான் அவருடைய மனமாற்றம். மனமாற்றத்திற்குப் பிறகு தனது கனவுகள் அனைத்தும் மாறியது, புதிய வழியைத் தேர்ந்தெடுத்து இறைவனுக்குத் தன்னால் என்ன செய்ய முடியும் என்பதனைத் தேடி தனது புதிய பயணத்தைத் தொடர்ந்தார். அவருடைய புதிய பயணத்தில் உருவானது தான் உலகம் போற்றும் இயேசு சபை. இன்று நாம் அனைவரும் இயேசுசபை என்ற பெரிய குடும்பத்தில் இருக்கிறோம் என்றால் அது புனித இஞ்ஞாசியாருடைய மனமாற்றத்தினால்தான்.

புனித இஞ்ஞாசியார் மனமாற்றமடைந்த இந்த 500ஆவது ஆண்டினை மிகவும் அர்த்தமுள்ள வகையில் கொண்டாடவும், நாமும் நம் வாழ்வில் மனமாற்றம் காணவும், மனமாற்றம் பெற்ற நம் வாழ்வு நாம் வாழும் சமுதாயத்திலும் மாற்றத்தைக் கொண்டுவர இஞ்ஞாசியார் ஆண்டு நம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறது. இத்தருணத்தில் எம் பள்ளி தே பிரித்தோ மேனிலைப்பள்ளியின் முன்னாள், இந்நாள் மாணவர்கள், ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டதுதான் இந்த மின்னிதழ். இந்த மின்னிதழ் “மாற்றம் கண்டிட” என்ற தலைப்பினை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மின்னிதழ் வெளிவருவதற்கு எங்களைத் தொடர்ந்து உற்சாகமூட்டும் தாளாளர் தந்தை ம. வின்சென்ட் அமல்ராஜ் சே.ச அவர்களுக்கும், தலைமை ஆசிரியர் தந்தை பெ. ஆரோக்கியசாமி சே.ச அவர்களுக்கும், மற்றும் ஏனைய தந்தையர்களுக்கும் படைப்பாளர்களாகிய எமது முன்னாள், இந்நாள் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும், பிழை திருத்தம் தந்து எம்மை ஊக்குவிக்கும் தந்தை தைரியம் சே.ச அவர்களுக்கும், இதழ் சிறக்க இணைந்து உழைத்த இதழாசிரியர் குழுவினர்க்கும், இந்த மின்னிதழை அழகாக வடிவமைத்த இளவல். ஜான் சில்வஸ்டர் சே.ச அவர்களுக்கும் எமது அகம் கனிந்த நன்றிகளும் பாராட்டுகளும்!

கிறிஸ்துவுக்குள் அனைத்தையும் புதிதாய்க் காணும் மனமாற்றம் பெறுவோம்!

இம்மின்னிதழை வாசிக்கும் அனைவருக்கும் எமது வாழ்த்துகளும் பாராட்டுகளும்!

அனைத்தும் இறைவனின் அதிமிக மகிமைக்கே! – புனித இஞ்ஞாசியார்

பாசத்துடன்
இளவல். சாலமோன் ஜோசப் பிரவின் சே.ச
ஆசிரியர்குழு

**ஆசிரியர் குழு**

சகோ.சூ.சாலமோன் ஜோசப் பிரவீன் சே. ச | இ.ஜான் கென்னடி | அ.பௌலியன்ஸ்
சூ.அன்பரசன் | ம.ஸ்டீபன் மிக்கேல்ராஜ் | ஜா. பூண்டி ஜெயராஜ் | ஜே.சாருலதா

## புனித இஞ்ஞாசியார்: கி.பி.1491 – கி.பி.1556
## வேரும்.. விருட்சமும்..

"உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராக இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" - லூக்கா 6: 36

உலக அரங்கில் இயற்கை வளம் நிறைந்த கண்டம் ஐரோப்பா. இங்குள்ள ஐபீரியன் தீபகற்பத்தில், கான்டர்பிரியன் மலை சூழ்ந்த அழகிய நாடு ஸ்பெயின். இங்கு "எசுப்பானியா" என்ற இடத்தில் "பாஸ்க்" என்னும் உயர்குடியில், 1491 அக்டோபர் 23 ல் பிறந்தவர் புனித இஞ்ஞாசியார்.

லயோலா என்னும் நவீன அரண்மனையில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர். இவர் நாட்டுப்பற்று மிக்க ஒரு சிறந்த போர் வீரர்.

1521 இல் பிரான்ஸ் நாட்டு இராணுவத்தை எதிர்த்து "பாம்பலோனா" போரில் இவர் வீரத்தோடு போரிட்டு, வலது காலில் குண்டடிபட்டு, பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு அதிக ஓய்வு கிடைத்தது.

"கிறிஸ்துவப் புனிதர்களின் வரலாறு," "இயேசு கிறிஸ்துவின் வாழ்வு" ஆகிய புத்தகங்களைப் படித்து, அவற்றால் ஈர்க்கப்பட்டு, மனம் மாறி, "பிரான்சிஸ் அசிசி" போன்ற புனிதர்கள் போல தன் வாழ்வை கடவுளுக்கு அர்ப்பணிக்க முடிவெடுத்து, தனது சொந்த பந்தங்கள், சொத்துக்கள் அனைத்தையும் துறந்தார்.

1522 இல் இஞ்ஞாசியாருக்கு தேவமாதாவும், குழந்தை இயேசுவும் காட்சியளித்தார்கள். இத்திருக்காட்சிக்குப் பின் இவர் அருகிலிருந்த "மன்ரேசா" என்னும் குகையில் பத்து மாதம் தங்கி, ஒரு நாளைக்கு 7 மணி நேரம் தொடர்ந்து இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார். இதன் விளைவாக இவர் தனது "ஆன்மீகப் பயிற்சிகள்" என்னும் நூலினை எழுதினார். அதன்பின் பாரிஸ் நகர் சென்று இறையியல் கற்றார். தன்னுடன் படித்த பீட்டர் பேவர், பிரான்சிஸ் சேவியர் ஆகிய இணைபிரியாத நண்பர்களுடன சேர்ந்து 1534 ஆகஸ்ட் 15 இல் குருவானவர் ஆனார்.

இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உரோமை நகரில் 1534 இல் இயேசு சபையைத் தோற்றுவித்தனர். இந்த இயேசு சபை என்னும் வேர் வளர்ந்து விழுதாகி, விருட்சமாக உலகமெங்கும் பரவி இருக்கின்றது. இச்சபையின் முக்கிய நோக்கம் இறைவனின் அதிமிக மகிமைக்காகப் பணி செய்வதே. ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என்ற உயரிய குறிக்கோளுடன் வார்த்தைப்பாடு எடுத்தனர். 1552 இல் இஞ்ஞாசியார் இயேசு சபையின் முதல் தலைவரானார். பல ஆன்மீகப் புத்தகங்கள் எழுதி அதன் வழியாக மறைப் பணியாற்றினார்.

பிரான்ஸ் நாட்டில் அல்சேஸ், லொரைன் என்னும் இரண்டு இடங்களில், இரும்பு மற்றும் நிலக்கரி வயல்கள் நிறைந்த "கனிமக் கருவூலம்" அந்நாட்டிற்கு பெருமை சேர்க்கின்றது. அதைப்போல் புனித இஞ்ஞாசியாரும், புனித சவேரியாரும் ஸ்பெயின் நாட்டைச் சார்ந்தவர்கள். இவர்கள் உலகம் புகழும் இயேசு சபைக்கு "ஆன்மீகக் கருவூலமாகத்" திகழ்கின்றனர்.

இஞ்ஞாசியார் அனைத்தும் இறை இயேசுவின் அதிக மகிமைக்கே என்ற இறையாட்சிக் கனவு நனவாக்க அயராது உழைத்தார். இவர் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரம் மற்றும் நிலை முறைக்கு உட்பட்டு, கீழ்ப்படிந்து அதன்படி தன் சபையினரையும் செயல்பட ஊக்குவித்தார்.

நவீன ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்தம் நடந்துகொண்டிருந்த வேளையில், கத்தோலிக்கத் திருச்சபை வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. நலிவடைந்த திருச்சபையை புதுப் பொலிவடையச் செய்தது இயேசு சபை.

உலகெங்கும் பரவியிருக்கும் இயேசு சபைக் கல்வி நிறுவனங்களில் 25 சதவீதம் இந்தியாவில் உள்ளனர். இயேசு சபைக் கல்வி நிறுவனங்களில் பயின்ற நம் நாட்டு தேசியத் தலைவர்கள் பலர். உதாரணமாக முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஆர். வெங்கட்ராமன், A. P. J. அப்துல் கலாம் போன்றோர்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தந்து, தமிழுக்கு தமிழ் அகராதி உருவாக்கிய வீரமாமுனிவர், சிந்து சமவெளி நாகரிக மக்கள் "சித்திர வடிவ" எழுத்தைப் பயன்படுத்தினார்கள் என்பதை ஆய்ந்து அறிந்து வெளியிட்ட அருட்தந்தை ஹீராஸ், இந்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக இருந்த அருட்தந்தை ஜெரோம் டிசோசா ஆகியோர் இயேசு சபை தந்தையர்கள் ஆவர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடிய கௌசானல், விதவை மறுமணத்தை ஆதரித்த டிரிங்கால், இந்திய கடற்கரை மண்ணில் கால் பதித்து, மேற்குக் கடற்கரையில் கல்விப் பணி ஆற்றிய புனித சவேரியார், தத்துவப் போதகர் இராபர்ட் - டி - நோபிலி, ஓரியூரில் மறைசாட்சியாய் மரித்த புனித அருளானந்தர் இவர்களெல்லாம் இயேசு சபை தந்தையர்கள்.

இந்தியாவில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கு அன்று கல்வி பெறும் உரிமை மறுக்கப்பட்டது. பிறப்பால் உயர்வு, தாழ்வு கண்டு மனித உரிமைகளை இழந்து நின்ற மக்களுக்குக் கல்வி கொடுத்து, மனித மாண்பை நிலைநாட்டிய பெருமை இயேசு சபைக்கே உரித்தாகும்.

கல்வியைப் பற்றியும், அதனை கற்றுக் கொடுக்கும் முறை (பாடத்திட்டம்) பற்றியும், உலகில் முதன்முதலாக வெளியிட்டவர்கள் இயேசு சபையினர். கல்வியே அனைத்திற்கும் அடிப்படை, மனித வளத்திற்கு முதன்மையானது கல்வியே என்பதை உணர்ந்தார் புனித இஞ்ஞாசியார். பிறருக்காக வாழ்கின்ற மனிதனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கம் என்பதைச் செயல்படுத்த விரும்பினார்.

திறமை மிக்க மாணவர்களை உருவாக்கும் போது அவர்கள் மனச்சான்று உள்ளவர்களாக, ஏழை எளியோர் மீது இரக்கம் கொண்டவர்களாக இருக்கும்படி உருவாக்க வேண்டும். கல்விப்பணி ஒரு திருப்பணி. வாழ்விற்கு வழிவகுக்கும் கல்வியானது, மதிப்பீட்டுக் கல்வியாகவும், மாணவர்களின் சிந்தனையைத் தூண்டக்கூடிய வகையில் அமைய வேண்டும். புனித இஞ்ஞாசியார் ஒரு புதுமை விரும்பி, தொலைநோக்குப் பார்வை கொண்டவர். எளிமையில் இனிமையும், ஏழ்மையில் தோழமையும் கொண்டவர்கள் தான் இயேசு சபையினர். இவர்களின் இலட்சியமானது நீதியும், மனிதநேயமும் நிறைந்த புதியதொரு சமுதாயத்தை உருவாக்குவதேயாகும்.

புனித இஞ்ஞாசியார் 1556 ஜூலை 31-இல் இவ்வுலகை விட்டு இறைப்பதம் சேர்ந்தார். இவருக்கு 1609 இல் திருத்தந்தை ஐந்தாம் பவுல் அவர்களால் அருளாளர் பட்டமும், 1672 இல் திருத்தந்தை பதினாறாம் கிரகோரி அவர்களால் புனிதர் பட்டமும் கொடுக்கப்பட்டது. 1922இல் திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் அவர்கள் இவரை ஆன்ம தியானம் மற்றும் மன ஒடுக்கத்திற்குப் பாதுகாவலராக அறிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 31-இல் அகிலம் போற்றும் இயேசு சபையினர், தாய்த் திருச்சபையுடன் இணைந்து புனித இஞ்ஞாசியாரின் திரு விழாவை மிகச்சிறப்பாக மகிழ்ந்து கொண்டாடி இறைவனுக்கு நன்றி நவில்கின்றனர்.

**- ச. அமலதாஸ்,**

**கூடுதல் உதவித் தலைமை ஆசிரியர் (ஓய்வு)**

## இறைவனின் அதிமிக மகிமைக்கே

1. படைப்பில் சிறந்த மானுடம்
படைத்த தெல்லாம் நவரசம்
தடை படு துன்பம் தாண்டிட
மடை படு வெள்ளப் பரவசம்
இடை படு உயர்வு செருக்கிலே
விடைபெறும் பண்பது கொடுவீசம்
நடை பல நானிலம் கற்றாலும்
உடை பெரு இறைபுகழ் அது நிசம்

2. பட்டம் பகட்டு வாழ்க்கையென
திட்டம் போட்டு நினைத்ததென்ன
தொட்டதெல்லாம் நடக்குமென
கட்டாயமாய்ச் சொன் னதென்ன
பட்ட காய முடக்கத்தினால்
மட்ட மாகிப் போனதென்ன
இட்ட இறைமாற்றியே இனிகோ
சட்ட மாக்கி முனைந்ததென்ன.

3. தனியொரு மனிதத் தூய்மை
இனிவரும் உலகின் ஒழுக்கம்
கனிவுரு கருணைப் பார்வை
முனிவுரு கறையைப் போக்கும்
பணியென குளிர்தரு சிந்தை
நனிபயன் நல்கிடும் வழக்கம்
மனிதத்தைப் போற்றிடும் மேன்மை
புனிதரின் மாண்பிறை முழக்கம்.

4. வணக்கம் சொல்லி மகிழ்வதுதான்
இணக்கம் கொள்ளும் கூட்டம்
பிணக்கம் இன்றி வாழ்வதுதான்
மணக்கும் மல்லித் தோட்டம்
தனக்கு என்னும் சுயநலம்தான்
உனக்கு கொள்ளி மூட்டும்
கணக்கன் இறைமாட்சி மைதான்
தணக்கம் பூமணம் காட்டும்.

5. திரும்பிடும் திசையெங்கும் ஒலிக்கும்
சருவாதிச் சாட்டைச் சத்தம்
புருவத்தை நிமிர்த்து எதிர்க்கும்
உருவத்தின் உணர்வே சுத்தம்
துருவத்து தேசத்துத் துன்பமும்
வேருடன் காதலே அறுத்தம்
கருயிர்க் கொடுமை நீக்கும்
அருவினை இறைவனில் பொருத்தும்.

6. வான் முட்ட சீறும் செருக்கிலே
தான் கொட்டும் கோர முருக்கிலே
தேன்கூட்டு இன்ப குடும்ப நிலை

வீண் கெட்டு சிதறும் அவலநிலை
பன்னரும் வேத வாக்கியங்கள்
முன்வந்து முழுக்க உரைப்பதுவோ
அன்னவன் அதிமிகு மாட்சிக்கான
அன்பென்னும் அழகுக் குடும்பமாமே.

7. அண்டமாம் இயற்கை உலகம்
கண்டம் பலவாய் மாறியே
கொண்ட காட்சி கோலம் யாவும்
உண்டு சிந்தை சிலிர்க்குதே
விண்ட பல்லுயிர் களெல்லாம்
கண்டு மகிழ்வில் பெருகிட வே
அண்டி இயற்கை காத்தலே
பண்டு இறைவன் மாட்சியாம்.

8. ஆற்றிடும் பணிகள் எதுவாயினும்
போற்றிடும் எண்ணம் வேண்டும்
தூற்றிடும் தீயவர் நாவென்றாலும்
மாற்றிடும் மருந்து வேண்டும்
சாற்றிடும் கொள்கை பொதுவென்றாலும்
ஏற்றிடும் வண்ணம் வேண்டும்
ஊற்றிடும் உண்மை நலமென்றாலும்
தேற்றிடும் இறை மகிமைக்கே வேண்டும்.

**- அ. பௌலியன்ஸ்**
**முதுகலைத் தமிழாசிரியர்**



**ஓவியம்**
**ஜா.பூண்டி ஜெயராஜ் , ஓவிய ஆசிரியர்**

## வேள்விக்கு இல்லை தோல்வி (சிறுகதை)

சமயத்துறவி ஒருவர் உலகநாடுகள் பலவற்றில் சமயப்பணி ஆற்றிவிட்டு கடைசியில் ஒரு தீவிற்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த மக்களிடம் மறைபரப்புப் பணியாற்ற முயன்றார். ஆனால் அங்கு வாழ்ந்த மக்கள் கூட்டம் அறியாமையில் மூழ்கிக் கிடந்தனர். ஒழுக்கநெறி பிறழ்ந்து மனம்போனபோக்கில் வாழ்ந்து வந்தனர். சமயத்துறவியின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காமல் அவரை விரட்டியடித்தனர்..

அங்கிருந்த காட்டுக்குள் மறைந்து வாழ ஆரம்பித்தார் சமயத்துறவி. அவரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட ஒருசிலர் மட்டும் மற்றவர்களுக்குத் தெரியாமல் காட்டிற்குள் அவ்வப்போது சென்று துறவிக்கு உணவளித்து போதனைகளைக் கேட்டு தங்கள் மனதையும் வாழ்க்கையையும் செம்மைப்படுத்திக் கொண்டனர்.

மாதங்கள் பல உருண்டோடின.. சமயத்துறவியால் மனம் திருந்தியோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.. அங்கிருந்த மக்கள் கூட்டத்தின் தலைவனுக்கு தம் மக்களில் ஒருசாராரின் செயல்பாடுகள் முற்றிலும் மாறுபட அவர்களைத் தனித்தனியே அழைத்து விசாரித்தான். யாரும் சமயத்துறவியைக் காட்டிக்கொடுக்கவில்லை.. மிரட்டிப்பார்த்தான்.. சித்திரவதை செய்தும் பார்த்தான்.. ஆனால் ஒருவர்கூட அவனது மிரட்டலுக்குப் பணியவில்லை. பலர் சிறையில் தள்ளப்பட்டார்கள். உணவு, தண்ணீர் தரப்படாமல் கொடுமைகளுக்கு உள்ளானபோதும் சமயத்துறவியைக் காட்டிக்கொடுக்க முன்வராத மக்களின் அசாத்திய துணிச்சல் அவனை அசைத்துப் பார்த்தது.

ஊருக்குள் நடப்பதையெல்லாம் கேள்விப்பட்டு மனம்நொந்த சமயத்துறவி தலைவனைச் சந்தித்துச் சரணடைந்தார். “தன்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுமாறும் அப்பாவி மக்களை விட்டு விடுமாறும்” கண்ணீர்விட்டுக் கதறியழுது வேண்டினார்.

துறவி சரணடைந்ததைக் கேள்விப்பட்டதும் அவரால் மனம்திரும்பி மறைந்து வாழ்ந்த பலரும் பெண்கள், குழந்தைகள் என எல்லோரும் குடும்பமாய் வந்து தலைவரிடம் சரணடைந்து தங்கள் உயிரை எடுத்துக்கொள்ளுமாறும் துறவியை விட்டுவிடுமாறும் காலில் விழுந்து கெஞ்சினார்கள்..

ஆத்திரத்தின் உச்சியிலிருந்த தலைவனுக்கு ஒருதுறவி மக்களும் மக்களுக்காய் ஒருதுறவி உயிர்விடத் தயாராயிருப்பதும் தன் காலில் விழுந்து கண்ணீர் விட்டுக் கதறுவதும் ஆச்சரியத்தை உண்டாக்கியது.. மெல்ல மெல்ல கோபம் தணிந்தது. “மக்களுக்காகவே தலைவன், தலைவனுக்காக மக்கள் இல்லை” என்று தன் தாத்தா அவனது சிறுவயதில் சொன்னது நினைவுக்கு வந்தது.

'மக்களை அழித்து சுடுகாடாக்கிவிட்டு எதைக் கட்டி ஆளப்போகிறோம்?' என்ற கேள்வியும் மனசுக்குள் எழுந்தது.

சமயத்துறவியிடம் மன்னிப்புக் கேட்டு அவருக்கு உரிய மரியாதை கொடுத்து அமர்வதற்கு இருக்கையும் அளித்தான். அவரது சமய நெறிகளைக் கேட்டுத் தெளிந்து மனம் மகிழ்ந்து அவனும் மனம்திருந்தி வாழ ஆரம்பித்தான்.

சிறைப்பட்டோரெல்லாம் விடுவிக்கப்பட்டனர். வதைக்கூடங்கள் எல்லாம் மறைக்கூடங்களாக மாற்றப்பட்டன.

ஒழுக்கம் உயிரினும் மேலானது என்பதை எல்லோரும் உணர்ந்துகொண்டார்கள்.. மக்கள் எல்லோரும் தம் தலைவனைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

மக்களின் வேண்டுகோளையும் தலைவனுடைய வேண்டுகோளையும் ஏற்று சிலகாலம் அங்கு தங்கியிருந்து விட்டு அடுத்த பயணத்திற்கு ஆயத்தமாகி விடைபெற்றுச் சென்றார் அந்த சமயத்துறவி.

படகிலேறி கரையிலிருந்த மக்களைப் பார்த்து கையசைத்துவிட்டுச் சொன்னார்.. "வேள்விக்கில்லை தோல்வி.."

அதற்குக் கடலலைகளும் ஒப்புதல் அளிப்பது போல் தலையசைத்து ஆமோதித்தன...

**- அ. உமர் ஃபாரூக், 12 A1**



**ஓவியம் : பாலாஜி ,XII E**

## புனித இஞ்ஞாசியாரின் மாற்றம் யாருக்கு ஏற்றம்?

வேதம் ஏடுகளிலே முடங்கிக் கிடக்க வேண்டியது அல்ல. நாட்டிலும், நகரிலும், தனி நபரிலும், சமுதாயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய ஒன்று. எங்காவது எப்போதாவது எண்ணத்தில் வருபவன் அல்ல இறைவன். எங்கும் எப்போதும் எண்ணத்தில், உள்ளத்தில் உறைந்திருப்பவன் இறைவன். அந்த இறைவனை இனம் கண்டுகொண்டு தனது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி பிறர் வாழ்வில் ஏற்றத்தை ஏற்படுத்தியவர் தான் புனித இலயோலா இஞ்ஞாசியார்.

திருச்சபையை இயேசுவின் மறையுடலாகக் கண்டு அதில் பட்ட மாசுக்களைப் போக்கி தனக்குள் முதலில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு இயேசு சபையை உருவாக்கிய இறையரசு வீரர்தான் புனித இஞ்ஞாசியார்.

உலகில் பெரும்பாலானோர் இயேசு சபையினர் நடத்தும் கல்வி நிறுவனங்களின் வழியாகவே இயேசு சபையை அறிவர். இந்தச் சபையின் பணிகளும் அவற்றின் புதிய கண்ணோட்டங்களும் மதிப்பீடுகளும் புனித இஞ்ஞாசியாரின் ஆவியால் ஊடுருவப்பட்டவை. அவர் மனமாற்றம் பெற்று 500 ஆண்டுகளாயினும் அவர் கொண்ட இறை அனுபவமும், இறைவன் அவருக்குத் தந்தருளும் நிறையருளும் இன்னும் இயேசு சபையை வழிநடத்துகின்றன.

புனித இஞ்ஞாசியார்க்கு சிறப்பஞ்சலி செலுத்தும் இவ்வாண்டில் அவரது அருள் வாழ்வும், உலக வளர்ச்சியில் பிறந்த சவால்களை அவர் சந்தித்த விதமும் இயேசு சபைக்கும் திருச்சபைக்கும் ஒரு புதிய ஒளியை, ஒரு புதிய மாற்றத்தைத் தருகின்றன என்றால் அது மிகையாகாது.

இறைவன் மீது கொண்ட பற்றும் பாசமும் வெளிச்சத்துக்கு வருவது ஏழை எளிய மனித வாழ்க்கையில் ஏற்படும் மாற்றம், ஏற்றம், மதிப்பீடு, ஈடுபாடு வழியாக மட்டுமே என்பதை தன் வாழ்வின் மூலம் உணர்த்தியவர் புனித இஞ்ஞாசியார்.

புனித இஞ்ஞாசியார் உடைய குடும்பப் பண்பாட்டுப் பின்னணி, தீர்க்க சிந்தனையாளராகவும், நினைத்ததைச் சாதிப்பவராகவும், எதையும் திறம்பட செய்பவராகவும் அவரை வளர்த்தெடுத்து அவருக்குள் மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம்.

இந்தப் பண்பாடு தான் ஆன்மீக முயற்சிகளில் இயேசு அரசரின் பணியில் அதிமிக மகிமையைத் தேடியது. "இன்னும் பெரிது" (MAGIS) ஆற்ற வேண்டும் என்ற கனல் நெஞ்சில் எரிந்த தீயாக வளர்ந்தது.

மனித வாழ்க்கை பகடைக்காயாய் மாறிக்கொண்டிருக்கும்போது அங்கே பண்பு பாசம் நிறைந்தோங்கி பகலவனாய் பிரகாசிக்கும் நல்ல செயல்பாடுகளையே நம் நெஞ்சங்கள் தேடும்.

பிறரிடம் பரிவு, சகோதர அன்பு, இரக்கம், மன்னிக்கும் மனப்பான்மை, நல்லிணக்கம், விருந்தோம்பல், அனாதைக்கு ஆறுதல், நலிந்தோரைத் தேற்றுதல், தளர்ந்த உள்ளங்களுக்குத் தட்டிக்கொடுத்தல், அனைவருக்காகவும் ஜெபித்தல் இவைகள் தானே புனித இஞ்ஞாசியாரின் வாழ்வை மாற்றி அழகு செய்த அருஞ்செயல்கள்!

சமுதாயத்தில் நடக்கும் எல்லா சீர்கேடுகளையும் சீர் கோடுகளாக மாற்றத் துடித்தார் புனித இஞ்ஞாசியார். எதற்காக? யாருக்காக? ஏழை எளிய மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற அல்லவா?

எனவே புனித இஞ்ஞாசியாரின் மதிப்பீடுகளை மதித்து கொள்கைப் பிடிப்போடு ஆன்மீகத்தை அஸ்திவாரமாகக் கொண்டு சாதனைச் சிகரத்தை எட்டிப் பிடிப்போம். வானமும் நமக்கு எல்லையில்லை வசப்படும் அனைத்துமே நமக்கு என்றும்.

புனித இஞ்ஞாசியாரின் மாற்றம்
யாருக்கு ஏற்றம்?
எங்கே ஏற்றம்?
எங்கே நெஞ்சத்தில்
வஞ்சகம் இல்லையோ
அங்கே ஏற்றம்.
எங்கே மனிதரில்
சாதி மத பேதம் இல்லையோ
அங்கே ஏற்றம்.
எங்கே புன்னகையில்
பொய் இல்லையோ
அங்கே ஏற்றம்.
எங்கே கண்களில்
கள்ளம் இல்லையோ
அங்கே ஏற்றம்.
எங்கே ஒடுக்கப்பட்டோர்
உரிமை வாழ்வு பெறுகின்றனரோ
அங்கே ஏற்றம்.
எங்கே ஒளியைத் தேடி
விழிகள் மலர்ந்திடுமோ
அங்கே ஏற்றம்.
எங்கே சொந்தபந்தங்கள்
உறவின் பாலமாகுமோ
அங்கே ஏற்றம்.
எங்கே பூமியில்
போர் பூசல் இல்லையோ
அங்கே ஏற்றம்.
எங்கே நன்மைகள்
நிலைத்திருக்குமோ
அங்கே ஏற்றம்...

**- ஆ. பீட்டர்.**
**முதுகலை ஆங்கில ஆசிரியர்**

## புயலொன்று புனிதமானது!

இன்னும் அதிகமான தாகம்
எதிரிகளை வீழ்த்துவதில் வேகம்
காலில் குண்டுகள் நிகழ்த்திட்ட சோகம்
திருவிவிலியம் படித்திட யோகம்.
வாசிப்பை நேசித்து
இறை வார்த்தையைச் சுவாசித்து
இயேசுவை மட்டுமே யோசித்து
இனிகோ பயணித்தார் இனிதாக....
விதைகளின் உருமாற்றம் விருட்சநிலை
மனிதரின் மனமாற்றம்
புனித நிலை
மன்ரேசா தந்த மாற்றம்
அதிமிக மகிமை நிலை
இன்றோ அது உலகளாவிய இயேசு சபை
உறைவாளை உதறிவிட்டு
இருபக்கக் கூர்
இறைவாளினை உளமேற்றி
மறைசாட்சியர் நிறை சபை கண்டு
மனமாற்றம் அதுஒன்றே பெரிதென்று
நிரூபித்த இனிகோ எனும் புயலொன்று
புனிதமாக ஈர்க்கிறது நமை இன்று...

**- ப. ஆரோக்கிய ஈசாக்**
**பட்டதாரித் தமிழாசிரியர்**

## செம்மொழியாம் தமிழும் இயேசு சபையும்

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்று தமிழ் தொன்மை மொழியாக விளங்கியதைப் புறப்பொருள் வெண்பாமாலை மேற்கோள் பாடல் விளக்குகிறது:

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும் வகை செய்ய வேண்டும்....

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

என்று மகாகவி பாரதியார் முழங்கினார். உலக மொழிகள் பலவற்றில் தமிழ் மொழி பண்பட்ட மொழியாகப் போற்றப்படுகிறது. கிரேக்கம், இலத்தீன், பாரசீகம், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம் என செம்மொழிகள் பல இருந்தாலும் இன்றளவும் தமிழ்மொழியே செம்மொழிகளில் தலை சிறந்ததாகப் போற்றப்படுகிறது. பரிதிமாற் கலைஞர் தமிழ் மொழியை செம்மொழி எனப் பாராட்டினார். பின்னர் கலைஞர் கருணாநிதி தமிழ்மொழி செம்மொழியாக மத்திய அரசால் அங்கீகாரம் பெற வழிவகுத்தார்.

இன்று செம்மொழியாம் தமிழ் மொழி உலகம் முழுவதும் சிறந்து விளங்குவதற்கு கிறிஸ்தவ அருட்தந்தையர்களின் தமிழ்த் தொண்டே முக்கியக் காரணமாகும். இயேசு சபையின் நிறுவுநர் புனித இஞ்ஞாசியாரின் வழித்தோன்றல்கள் வெளிநாடுகளிலிருந்து தமிழகம் வந்து கிறிஸ்துவத்தைப் பரப்ப வந்தவர்கள் தமிழ் மொழிக்கு மகுடம் சேர்த்துள்ளார்கள். அவர்களின் தமிழ்ப் பணியைப் பற்றி இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

### தமிழ் வளர்த்த கிறிஸ்தவப் பெரியோர்கள்

“உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்” என்று தொல்காப்பியத்தில் உரைநடை பற்றி கூறும் போது கூட செய்யுள் வடிவிலே தான் கூறப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்கள் முழுவதும் செய்யுள் வடிவிலேயே காணப்பட்டன. உரைநடை நூல்கள் தமிழில் இல்லாத நிலை இருந்தது. அப்போது முதன்முதலில் உரைநடை நூலை உருவாக்கியவர்கள் இயேசு சபை அருட்தந்தையர்கள் ஆவர்.

கி. பி. 1577 - இல் “கிறிஸ்தவ வேதோபதேசம்” என்னும் உரைநடை நூல் வைப்புக் கோட்டை என்னும் ஊரில் வெளியிடப்பட்டது. 1579 இல் “கிறிஸ்தவ வணக்கம்” என்னும் நூலை அருட்தந்தை ஆன்ரிக் எழுதி வெளியிட்டார். போர்ச்சுகீசிய நாட்டிலிருந்து தமிழகம் வந்த ஹென்றிக் பாதிரியார் (1520-1600) தமிழில் முதன் முதலில் விவிலியத்தை அச்சிட்டார். ஆகவே அவர் “தமிழ் அச்சின் தந்தை” எனப் போற்றப்படுகிறார்.

ஜெர்மனியில் இருந்து தமிழகம் வந்த டேனிஷ் சபையைச் சேர்ந்த பர்த்தலோமியோ சீகன் பால்கு ஐயா (1683 - 1719) அச்சுப்பொறியை தன் நாட்டில் இருந்து வரவழைத்து தஞ்சை அருகில் உள்ள தரங்கம்பாடியில் நிறுவினார். 1713 ஆம் ஆண்டில் அச்சு பதிப்பித்து நூல் வெளியிடப்பட்டது. கனடாவிலிருந்து தமிழகம் வந்த ஜி.யு. போப் தூத்துக்குடி அருகில் சாயர்புரம் என்னும் ஊரில் கல்லூரி அமைத்துப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். தமிழ் மேல் கொண்ட பற்றினால் திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். “இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்” என அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரது கல்லறையில் எழுதப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியிலிருந்து 1838 ஆம் ஆண்டில் சென்னை ஆட்சியராகப் பணியாற்றிய பிரான்சிஸ் வயிட் எல்லீசர் வீரமாமுனிவரது வரலாறு எழுதினார். திருக்குறளில் முதல் 13 அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அருந்தமிழ் சுவடிகளை சேகரிப்பதிலும், பாதுகாப்பதிலும் ஆர்வம் உடையவராய் விளங்கினார். தமிழ் மொழியின் செம்மை, தொன்மை பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதியுள்ளார்.

அயர்லாந்திலிருந்து திருநெல்வேலி இடையன்குடியில் வாழ்ந்த இராபர்ட் கால்டுவெல் ஐயர் தமிழ் மொழியை நன்கு கற்று, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், இலக்கணக்கொத்து, தமிழ் ஆராய்ச்சி போன்ற நூல்களைப் படைத்துள்ளார். எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் போன்ற நூல்களையும் வேதநாயகம்பிள்ளை முதல் புதினமாகிய “பிரதாப முதலியார் சரித்திரம்” என்னும் நூலையும், வேதநாயக சாஸ்திரியார் “ஞானத் தச்சன் நாடகம்” நூலையும், சாமுவேல்பிள்ளை தொல்காப்பிய நன்னூல் என்ற நூலையும், ரஷ்ய நாட்டிலிருந்து வந்த ரேனியஸ் ஐயர் தமிழ் இலக்கண நூல், சமயச் சாரம் ஆகிய நூல்களையும் படைத்துள்ளார்.

அருட்தந்தை தனிநாயகம் அடிகளார் யாழ்ப்பாணத் தமிழர், பன்மொழி கற்ற வித்தகர், மறைப்பணியாற்றிக்கொண்டு தமிழ் மொழியை உலக அரங்கில் உயர்த்தியவர். “தமிழ்த் தூது” என்ற நூல் அடங்கலாக 1952 இல் 137 நுல்கள் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறாக தமிழ்வளர்த்த கிறிஸ்துவத் தமிழ் சான்றோர்களின் பங்கு பெரிது.

### இயேசு சபைத் தந்தையர்களின் தமிழுணர்வு

புனித இஞ்ஞாசியார் மனமாற்றம் பெற்ற 500 ஆம் ஆண்டு கொண்டாடும் வேளையில் இயேசு சபை அருட்தந்தையர்களின் அரும்பணிகள் அகிலத்தில் அரங்கேற்றப் படவேண்டும். இறைப்பணி மட்டுமல்லாது சமூகப் பணி மற்றும் கல்விக்காக ஆற்றும் பணிகள் அளப்பரியது. அயல்நாடுகளில் இருந்து தமிழகம் வந்து மக்களோடு மக்களாகத் தன்னை மாற்றிக்கொண்டு உணவு, உடை, மொழி, கலாச்சாரம் அனைத்தையும் தனதாக்கி, தமிழுக்குத் தொண்டு செய்த அருட்தந்தையர்களைப் பாதம் வணங்கிப் பாராட்ட வேண்டும். அவர்களில் சிலரைப் பற்றி ஆய்வோம்.

### தத்துவப் போதக சுவாமிகள்

இத்தாலி நாட்டிலிருந்து அருட்தந்தை இராபர்ட் தெ நோபிலி இந்தியாவுக்கு மறைப் பணி செய்ய வந்தார். 1606 நவம்பர் 15ஆம் நாள் மதுரை மிஷனில் பொறுப்பேற்று பணியாற்றினார். இந்தியத்துறவிகள் போல வேடமிட்டார். பூணூல் அணிந்து, நெற்றியிலும், மார்பிலும் சந்தனம் பூசிக்கொண்டு, குடுமி வைத்து, காவி உடை அணிந்து சைவ உணவை உண்டு பிராமணர்கள் போல இருந்துகொண்டு இறைப் பணியாற்றினார். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். தத்துவப் போதகர் என்று அழைக்கப்பட்ட இவர் தமிழ் மீது மிகுந்த பற்று கொண்டார். ஞான உபதேச காண்டம், மந்திர மாலை, புனர்ஜென்மம் போன்ற 17 நூல்கள் எழுதியுள்ளார்.

### வீரமாமுனிவர்

இத்தாலி நாட்டில் பிறந்த கான்ஸ்டன்ட் ஜோசப் பெஸ்கி என்ற பெயரைத் தாங்கிய வீரமாமுனிவர் 1700 இல் மதுரை வந்தார். தமிழ் பண்டிதர் சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார். பாரசீகம், இந்துஸ்தான், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தனது பெயரை “தைரிய நாத சுவாமி” என மாற்றினார். பிறகு அப்பெயர் வீரமாமுனிவர் என தூய தமிழில் வழங்கப்படுகிறது. இந்தியச் சூழலுக்கு ஏற்ப முனிவர் வேடம் பூண்டு புலித்தோல் மேல் அமர்ந்து செபம், தவம் செய்தார். கம்பன் காவியம் போல சூசையப்பரின் வாழ்வியலை “தேம்பாவணி” காப்பியமாகப்படைத்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றினார். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். தமிழின் முதல் அகராதியான “சதுரகராதி” நூலைப் படைத்து அகராதியின் தந்தை எனப் போற்றப்பட்டார். திருக்காவலூரில் கல்லூரி அமைத்து வேதியர்களுக்கு தமிழ் இலக்கணங்களைக் கற்றுக் கொடுத்தார். செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னுல் விளக்கம், வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை மற்றும் சிற்றிலக்கியங்களைப் படைத்து தமிழ் உலகிற்கு பெரும் தொண்டாற்றியுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து தமிழகம் வந்த மறைசாட்சியான அந்தோனி கிரிமினாலி, புனித சவேரியார், புனித அருளானந்தர் ஆகியோர் தமிழ் கற்று மறையுரையாற்றி தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

“இறைவனின் அதி உன்னத மகிமைக்காக” என்னும் குறிக்கோளுடன் பணியாற்றும் இயேசு சபையினர் அறிவுலகில் அகிலம் முழுவதும் வலம் வருபவர்கள். தமிழ் இலக்கிய உலகில் இன்று அருட்தந்தையர் ஆற்றும் பணிகள் அளவிடற்கரியன. “வைகறை பதிப்பகம்” மற்றும் “திரு இருதய தூதன்” போன்ற இதழ்கள் மூலம் தமிழ்ப் படைப்புகள், ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. செம்மொழியாம் தமிழ் மொழி வளர்ந்து உயர்ந்திருப்பதற்கு இயேசு சபை அருட்தந்தையர்கள் அரும்பாடுபட்டு வளர்த்திருக்கின்றனர். இன்னும் அதிகமாக....... என்ற புனித இஞ்ஞாசியாரின் வேண்டுதலுக்கு ஏற்ப தமிழ்மொழி மேலும் வளர வாழ்த்துவோம், வளம் பெறுவோம்.

**– முனைவர். அ. மைக்கேல் குருஸ்**
**முதுகலைத் தமிழாசிரியர்**




**ஓவியம் : ஜா.பெர்னால்டு ஜார்ஜ்ராஜ் , முன்னாள் மாணவர்**

## இயேசு சபையின் கல்விப்புரட்சி

உழைத்து உழைத்து ஓடாய்ப் போனவன்
உயர என்ன வழி என யோசித்தான்!
களைத்துப் போனவன் கண் துஞ்சவும்
கவலை நீங்கவும் என்ன வழி என்றான்!
தன் குடும்பம் தானே உயர யார்
தயை வேண்டும் என்று தவித்தான்!
வாழ்நாளை வசந்தம் உள்ளதாய் மாற்ற
வானத்தை நிமிர்ந்து பார்த்தான் யாது செய்ய!
அத்தனைக்கும் ஆதாரம் தேட முயன்றான்
அதுதான் அகவிருள் நீக்கும் கல்வி என்று!

இதையே இன்றளவும் இயேசு சபை செய்கிறது என்று
இறுமாப்போடு சொல்ல முயன்றான் அன்றே!
ஆம்! ஆதாரத்தோடு மனிதன் தலைநிமிர
அங்கிருந்தே கல்வி என்னும் ஆயுதத்தை!
தூக்கிப்பிடித்துத் தூணாய் நின்றது இயேசுசபை,
துயரம் தீர்க்கும் கல்வியெனும் தேருக்கு!
அச்சாணியாய் அன்றே அமைந்தது
அச்சம் தீர்க்கும் அருமருந்தாய் ஆனது!
கல்வி ஒன்றே கல்லாமையைப் போக்கும்
கல்லோவியமாகும் என்பதை அன்றே சிந்தித்தது!
கல்விப் புரட்சியே காரிருள் நீக்கும்
காவியமாய் உயர்ந்து நிற்கும்!
ஏழை பணக்காரன் ஏமாளி கோமாளியைக் கூட
ஏணியில் ஏற்றி அழகு பார்த்தது! இயேசு சபை!
எண்ணற்ற மாணாக்கர்களைக் கூட
ஏற்றம் காணச் செய்தது! இயேசு சபையை!
இயேசு சபையால் உயர்ந்திட்ட மாணாக்கர்கள்
ஏராளம்! தாராளம்!
ஏடு தூக்கிச் சென்ற நாள் முதல்
ஏட்டைத் தூக்கி எறிந்து!
கணிப்பொறியில் கை வைத்த காலம் வரை
கண்ணியமாய்க் கவலையின்றி வளர்ந்தோர் பலர்!
ஏழை மாணாக்கர்களை இனம்கண்டு
ஏட்டுக் கல்வியை இவனுக்குக் கொடுத்தது!
எண்ணத்தை வண்ணமாக்கி
எண்ணிலடங்கா எளியோர்களை!
உயர்த்திட்ட பெருமை இயேசு பெருமான் தந்திட்ட
உன்னதத் திட்டமே கல்வியெனும் மாபுரட்சி!
வாழத்துடிப்போர்க்கு ஒரு
வழிகாட்டியாய்!
சிகரம் தொட நினைப்போருக்கு ஒரு
சித்திரமாய்!
எத்தனை யுகங்கள் கடந்தாலும் ஒரு
சிந்தனை போல!
தன் பணியைத் தமிழுக்கும், தமிழர்க்கும்
தரணிக்கும் செய்தே தீரும்!
காலங்கள் பல கடந்தாலும்
காவியமாய்க் காப்பியமாய்க் களிகூரும்!
ஆயுதம் ஏந்தியவன்
அகிலத்தை ஆள்வது போல்!
கல்வியைக் கையில் ஏந்தியவன்
காலத்தை வெல்வான்!
காப்பியம் படைப்பான்!
காலம் அவனுக்குக் கையில்!

- **அ. ஜான் பாப்டீஸ்ட்**
**பட்டதாரித் தமிழாசிரியர்**

## என் வாழ்வில் இஞ்ஞாசியார்

எனக்கு முதன்முதலாக இஞ்ஞாசியார் நம் பள்ளி கையேட்டின் மூலம் தான் அறிமுகமானார். அழகான வேலைப்பாடுகள் மிகுந்த ராஜாவின் உடையைப் போல் அணிந்திருந்த அவரது கம்பீரமான உருவம் இனம்புரியாத ஈர்ப்பை உண்டாக்கியது.

பிறகு ஒவ்வொரு நாளும் காலை இறைவழிபாட்டில் இஞ்ஞாசியார் செபம் சொல்லும்போது தொடக்கத்தில் புரியாமல் தெளிவில்லாமலிருந்த வார்த்தைகள் எல்லாம் மனசுக்குள் மனப்பாடமானபிறகு ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிந்துவிட்டன. காயத்தைக் கவனியாமல் போரிடவும், ஓய்வைத் தேடாமல் உழைக்கவும், கைம்மாறு கருதாமல் கொடுக்கவும் வேண்டிய மனப்பக்குவத்தை என்னுள் ஏற்படுத்தியுள்ளன. இப்போதும் கடவுளிடம் வேண்டும்போது எனக்கு பள்ளியில் தினந்தோறும் சொல்லும் இஞ்ஞாசியார் செபம்தான் முதலில் நினைவுக்கு வரும். இஞ்ஞாசியார் விழா பள்ளிப்பேரவைகளில் பேச்சு, நாடகம், பாடல் என பல்வேறு விதங்களில் இஞ்ஞாசியாரைப்பற்றி அறிந்துகொண்டேன். நம் பள்ளி இனிகோ இசைக்குழுவின் பெயரிலுள்ள “இனிகோ” இஞ்ஞாசியாரைத்தான் குறிக்கும் என்பதும் அதற்குத் தமிழில் “நெருப்பு” என்று பொருள் என்பதும் எனக்கு வெகுநாட்களுக்குப் பிறகுதான் தெரியும். இஞ்ஞாசியாரைப் போல் விவேகத்திலும் வீரத்திலும் தலைசிறந்த வீரனாகத் தன்னலம் கருதாத தலைவனாக கொள்கையுறுதி கொண்ட அறிஞனாக

வாழ வேண்டுமென்ற எண்ணத்தை இயேசு சபைத் தலைவராம் தூய இஞ்ஞாசியாரின் வாழ்வியல்வழி நான் கற்றுக்கொண்டேன்..

அவர் வழியில் வெற்றிநடை போடவும் தொடங்கிவிட்டேன்.

- ப. அருண், தேவகோட்டை. (முன்னாள் மாணவர்)

தொலைக்காட்சிப் பேச்சாளர்

## காயம் கற்பித்த பாடம் (சிறுகதை)

இரவு உணவு சாப்பிட உட்கார்ந்த அலெக்ஸிற்கு அலுவலகத்தில் மேலதிகாரியிடம் கவனக்குறைவாக இருந்ததற்காக வாங்கிய திட்டுதான் மனசுக்குள் மீண்டும் மீண்டும் மறு ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அன்று முழுவதும் அலுவலகத்தில் அடக்கி வைத்திருந்த ஆத்திரமும் அவமானமும் அடுப்பில் உலை கொதிப்பது போல் உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந்தது.

“கொழம்பே இல்லாம வெறுஞ்சோத்தப் பிசைஞ்சுக்கிட்டிருக்க.. விக்கிக்கப்போவுது.. குழம்பு ஊத்திக்கப்பா..” என்று சொல்லியவாறே குழம்பை ஊற்றினாள் அம்மா புஷ்பம். அப்பொழுதுதான் சுயநினைவுக்கு வந்த அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. “எனக்கு வேணும்னா ஊத்திக்க எனக்குத் தெரியாதா? என் கண்ணு என்ன அவிஞ்சு போச்சா? இல்ல.. கை, கால் நொண்டியா கிடக்குறேனா? இன்னிக்கு காலங்காத்தால உன் மூஞ்சில முழிச்சேன் பாரு.. அதான் வெளங்காமப் போச்சு.. எப்ப பாரு.. சும்மா நொய் நொய்னுட்டு.. கருமம்புடிச்ச வீட்டுல கொஞ்சமாச்சும் நிம்மதியா இருக்க முடியுதா?” ஆத்திரத்தில் கத்திக்கொண்டே சாப்பாட்டுத் தட்டை எத்திவிட்டான் அலெக்ஸ். சோறு வீடு முழுக்க இரைந்தது.. “ஆறிப்போய் வைத்தால் வயிறாரச் சாப்பிடமாட்டானே..” என்று சுடச்சுட வைத்திருந்த குழம்பு அலெக்ஸ் எற்றிவிட்டதில் புஷ்பத்தின் கையில் கொட்டிச் சிதறியது. துடிதுடித்துப் போனாள்.. குழம்புச்சூட்டை விட மகன் பொரிந்து தள்ளிய வார்த்தைகளின் சூடு தாங்க முடியாமல் கண்ணீர் பொங்கி வழிந்தது. நெருப்பை அள்ளிக் கொட்டியது போல் மனசு துடித்தது.. சத்தம்கேட்டு அடுப்பங்கரையில் இருந்து ஓடி வந்த அக்கா மேரி அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றாள். அறைக்குள் போய் கதவை அறைந்து சாத்திக் கொண்ட அலெக்ஸிற்கு நேரம் செல்லச் செல்ல கோபம் வந்ததும்தான் ஆத்திரத்தில் அறிவிழந்தது மண்டைக்கு உறைத்தது. “மேலதிகாரி திட்டியதற்கு பாவம் அம்மா என்ன செய்வாள்? ச்சே.. இப்படி மிருகத்தனமாக நடந்து கொண்டோமே” உள்ளுக்குள் புலம்பிக் கொண்டிருந்தான். அறைக்கு வெளியே தன்னைத் திட்டி விட்டானே என்ற வருத்தத்தை விட மகனைச் சாப்பிட விடாமல் செய்து விட்டோமே.. என்ற குற்ற உணர்ச்சி மனதைக் குடைந்து கொண்டிருந்தது புஷ்பத்திற்கு..

‘அப்படி என்ன நான் தப்பு செஞ்சேன்? விக்கிக்கப் போறானேன்னு குழம்ப ஊத்துனது தப்பா? பசங்க வளர்ந்துட்டா பெத்தவங்க ஒதுங்கிக்குறதுதான் நல்லதோ? பரிமாறுறது கூட குத்தம்தானோ? அடுப்புப் புகையிலேயே கிடந்து கறுத்து வெட்டு வேலைக்குப் போய் வெயிலில் சுருங்கிப்போன தன் முகம் பெத்த மகனுக்கே கேவலமாப் போய்டுச்சே.. அஞ்சாங்கிளாஸ் வரை “அழகு பெத்த அம்மா.. அழகு பெத்த அம்மா”ன்னு முகம் தழுவி கை மடக்கி தலையில் திருஷ்டி சொடக்கு போட்ட மகனா இன்னிக்கு உன் மூஞ்சில முழிச்சதனாலதான் வெளங்காமப் போச்சுன்னு சொல்றான்.’ நினைக்க நினைக்க அழுகை முட்டிக்கொண்டு வந்தது. கண்களில் நீர் தாரை தாரையாய் ஓடியது. அப்படியே சுவரோரமாய் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

கண்களை மூடிப் படுத்திருந்தவளுக்கு பழைய சம்பவங்கள் எல்லாம் கண்முன் வந்து போயின.. அலெக்ஸ் கருத்தரித்த நாட்களில் குடுகுடுப்பைக்காரன் வந்து பொறக்கப் போற குழந்தைனால இந்த வீட்டுக்கு வராத கஷ்டங்கள் எல்லாம் வந்து சேரும்… கேளாத பழிச் சொல்லும் கேட்க நேரும்னு சொன்னதைக் கேட்டு கணவன் கருவை கலைக்கச் சொல்லி வற்புறுத்த ஒரு வாரம் பட்டினி கிடந்து கணவனை சமாதானப்படுத்தியதும் எட்டாவது மாதத்தில் கருப்பை கீழிறங்க ஆஸ்பத்திரிக்கு அலறியடித்து ஓடி கருப்பையை வலை வைத்து தூக்கி வைத்ததும் குழந்தை பிறந்ததிலிருந்தே ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் ராத்திரி பகலாய் நடந்து அலைந்ததும் ஐந்து வயதில் மகனுக்கு விஷக் காய்ச்சல் சரியாக வேண்டிக்கொண்டு வேளாங்கண்ணிக்கு நடந்து போய் மொட்டை போட்டுக்கொண்டு வேண்டுதல் நிறைவேற்றியதும் மனத்திரையில் காட்சிகளாய் ஓடின.

எண்ண ஓட்டங்களுடன் கடிகாரமும் சேர்ந்து ஓடி பொழுது புலர்ந்தது. மறுநாள் வழக்கம் போல் 7 மணிக்கு எழுந்து அரக்கப் பரக்க ஆபீஸ் கிளம்பியவன் கண்ணில் தட்டுப்படவே இல்லை அம்மா. அடுப்படியை விட்டு வெளியே அவள் வரவே இல்லை.. நாட்காட்டியில் ராசிபலன் பார்த்தான்.. “வரவு” என்றிருந்தது. அம்மாவிடம் போய் மன்னிப்புக் கேட்க

மனமுமில்லை.. மனமில்லாததால் நேரமுமில்லை.

அவசர அவசரமாய் வெளியே பைக்கை எடுத்து நகர்த்தியவன் சைடு ஸ்டாண்ட் எடுக்க மறந்து போனான். சற்று தூரத்திலேயே தெருமுனையில் சரளைக் கல் தடுக்கி கீழே விழுந்து “அம்மா...” என்று அலறினான். அடுப்படியில் இருந்த புஷ்பத்திற்கு அலெக்ஸின் அலறல் கேட்டது. “ஏசுவே இரட்சியும்..” என்று கத்தியபடி பதறியடித்து ஓடினாள். அவள் பின்னால் அம்மாவின் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அக்கா ஓடிவந்தாள். காலில் கல் குத்தி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.. வண்டி பள்ளத்திற்குள் கிடந்தது. தன் சேலைத் தலைப்பை வைத்து கட்டுப் போட்டாள் அம்மா.

“ஐயோ.. கடவுளே.. என் புள்ளைக்கு ஏன் சோதனை மேல் சோதனையா கொடுக்கிற? உனக்கு நான் என்ன குறை வச்சேன்?” அழுது புலம்பினாள் அம்மா.

அலெக்ஸிற்கு நேற்றிரவு தன் தாயிடம் கோபத்தில் மிருகத்தனமாய் நடந்துகொண்டதெல்லாம் நினைவுக்கு வந்தது. அவனை நினைக்க அவனுக்கே அருவெறுப்பாக இருந்தது.. இஞ்ஞாசியாருக்கு ஏற்பட்ட காயம் அவரது புனிதவாழ்விற்கு வழிகாட்டியதுபோல அலெக்ஸிற்கு உண்டான காயம் அவன் மனிதனாய் மனம் மாற அந்த நொடியில் வழியமைத்தது.

அலெக்ஸ் கால்களில் இரத்தம் வழிவது நின்று விட்டது. ஆனால் கண்களில் கண்ணீர் வழியத் தொடங்கி இருந்தது.. அப்படியே அம்மாவின் மடியில் அலெக்ஸ் தலைசாய்த்து குமுறி குமுறி அழுது தன் பாவங்களைக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருந்தான். குழம்புச் சூட்டில் காயம்பட்ட அம்மாவின் கைகள் அலெக்ஸின் தலைகோதி ஆறுதல் தந்து கொண்டிருந்தன.

அது சரி.. இன்று அவன் கண் விழித்தது யார் முகத்தில் தெரியுமா? கண்ணாடியில் அவன் முகத்தில்தான்..

**சிந்திக்க:**

திருக்குறள்-307

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு

நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

பொருள்:

நிலத்தைக் கையால் அறைந்தவனுக்கு உறுதியாக அவன் கைதான் வலிக்கும். அது போலத்தான் சினத்தைப் பண்பாகக் கொண்டவன் நிலையும் ஆகும்.

**தியானிக்க:**

நீதிமொழிகள் 6: 20-23

பிள்ளாய்! உன் தந்தையின் கட்டளையைக் கடைப்பிடி தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே. அவற்றை எப்போதும் உன் இதயத்தில் இருத்தி வை. உன் கழுத்துக்கு மாலையென அணிந்து கொள். நீ நடந்து செல்லும்போது அவை உனக்கு வழிகாட்டும். நீ படுத்திருக்கும்போது அவை உன்னைக் காவல் காக்கும். விழித்திருக்கும்போது உன்னுடன் உரையாடும். கட்டளை என்பது ஒரு விளக்கு அறவுரை என்பது ஒளி. கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி.

**- முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல்ராஜ்,**

**பட்டதாரித் தமிழாசிரியர்.**

## இயேசு சபையின் கல்விப் புரட்சி

**முன்னுரை**

கல்வி மனிதனை முழுமையாக்குவது. அவனில் அடங்கியிருக்கும் சிறப்புகளை, உன்னதத்தை வெளிக்கொணர்வது. சமூகத்தோடு சமூகத்திற்காக வாழ வைப்பது. “கேடில் விழுச்செல்வமாகிய கல்வியை இறக்குமளவும் கற்க வேண்டும்” என்கிறது தமிழ் மறை. “கல்வியை அறியாமை நோய் அறுக்கும் மருந்து” என்கிறது நாலடியார். “கல்வியறியாமை தேசத்தின் பாவம் தேசத்திற்கு அவமதிப்பு” என எச்சரித்தார் மகாத்மா. “பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற வேண்டும்” என்று வாழ்த்தினான் மகாகவி பாரதி. கல்வி பற்றி, அதன் தேவை பற்றி, சிறப்பு பற்றி பேசாத அறிஞர் இல்லை. அத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியில் இயேசு சபையாரின் புரட்சிகரமான செயல்பாடுகள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

**வேத காலக் கல்வி**

வேத காலத்தில் கல்வி பிறப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பிறப்பால் உயர்ந்தோர் எனப்பட்டோர் கல்வி கற்கவும் கற்பிக்கவும் உரிமை பெற்றிருந்தனர். கற்பித்தலும் கற்றலும் பிறப்பால் உயர்ந்த சாதியினருக்கே இருந்தமையால் அவர்கள் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். பிறப்பாலும் பொருளாதார ரீதியாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி எட்டாக்கனியாக இருந்தது. சமய வழியில் இந்நிலை உறுதியாக்கப்பட்டது. நிலைநிறுத்தப்பட்டது.

வேத காலத்தில் மட்டுமல்ல இடைக்காலத்திலும் கூட கல்வியின் கரு சமய அடிப்படையிலேயே அமைந்திருந்தது. சமூகத்தில் தனி மனிதன் தான் சார்ந்திருந்த சாதியாலும், பொருளாதார பலத்தாலும் பெற்றிருந்த தகுதியே அவனுக்கான கல்வி வாய்ப்பையும் நிர்ணயித்தது.

### ஆங்கிலேயர் காலக் கல்வி

ஆங்கிலேயர் காலக் கல்வித் திட்டம் பிறப்பின் அடிப்படையில் கல்வி என்ற நிலையைத் தகர்த்து ஒரு குறிப்பிட்ட சாதியின் மேலாதிக்கத்தை உடைக்க ஓரளவு வழிவகுத்தது.

வேத காலத்தைப் போல் இவர்கள் காலத்திலும் கல்வி உயர் மட்டத்தில் இருக்கும் ஆட்சியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் கருவியாகவும் கல்வித் துறையில் செய்யப்படும் மாற்றங்கள் அவர்களின் தேவைக்கேற்ப செய்யப்பெற்ற மாற்றங்களாகவுமே இருந்து வந்தன.

### இயேசு சபையினரின் தனிப்பண்பு

கிறிஸ்தவம் கொண்டுள்ள பல்வேறு சபைகளில் இயேசு சபைக்கென்று சில தனித்தன்மைகள் உண்டு. இயேசு சபை இவ்வுலகில் மனிதன் ஆற்றும் அனைத்து நற்செயல்களையும், கடவுளையும் மனிதனையும் இணைக்கின்ற செயல்களாகக் கொள்கிறது. உலகில் இயேசு சபையாரின் எண்ணிக்கை வெறும் பத்தாக இருந்த காலத்திலேயே இவர்கள் பணி இந்திய மண்ணில் தொடங்கிவிட்டது. புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியாவில் கால்வைத்த நாள் தொட்டு இன்றுவரை இங்கும் உலகமெங்கிலும் இவர்கள் ஆற்றிவரும் பணி மனிதனை மையமாகக் கொண்ட பணியே.

திருச்சபை வரலாற்றுப் போக்கில் அது சென்ற வழியே செல்லாது விசுவாசச் செழுமையில் திருச்சபைக்குப் புத்துயிரூட்டியவர் புனித இஞ்ஞாசியார். அன்னார் காட்டிய வழியில் மறைபரப்புப் பணி செய்ய தமிழகம் வந்தோர் புனித சவேரியார், புனித அருளானந்தர், தத்துவப் போதகர் இன்னும் பலர். இவர்களெல்லாம் வாழ்ந்த காலத்தின் சூழலுக்கு ஏற்ப தம்மை இறைப்பணியில் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள். வாழ்வின் கடைத்தட்டில் வாழ்ந்து வந்த மக்களைத் தேடி அவர்களோடு அவர்களாய் மாறிப்போய் புதுவாழ்வு கொடுத்தனர். பிறப்பால் ஒடுக்கப்பட்டோருக்குத் திறவாத ஆலய வாயில்களை அகலத் திறந்ததோடு முடியாண்ட மன்னனையும், பிராமணனையும், சூத்திரனையும் ஒரே இடத்தில் அமரச் செய்தனர். வாழ்கின்ற இடத்திற்கு ஏற்பத் தம்மை மாற்றிக்கொண்டு இன்று நாம் பேசும் தாராளமயமாக்கலுக்கு அன்றே உருக் கொடுத்து மண்ணின் மைந்தராய் வாழ முயன்ற தத்துவப் போதகர், தமிழே தாமாகி தாமே தமிழாகி வாழ்ந்து காட்டிய வீரமாமுனிவர், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடிய கௌசானல், அன்றே கைம்பெண் மறுமணத்தை ஆதரித்து நடத்திக் காட்டிய ட்ரிங்கால் போன்றோர் பணியெல்லாம் உலகியற் பணிகளுக்குச் சான்று தருவன.

### கல்வியில் புரட்சி

திருச்சபை என்பது அசையாத பாறை அல்ல இயங்குகின்ற காற்று என்பதைப் புரிந்து வரலாற்றில் இயங்கும் சமுதாயத்திற்காக இயங்கியவர்கள் இயேசு சபையினர். சமூகப் பணியும் மனித உரிமைப் பணியும் இவர்களது மறைபரப்புப் பணியின் நோக்கமாக இருந்தன.

எங்கெல்லாம் பணி மேற்கொண்டார்களோ அங்கெல்லாம் கல்விக்கூடங்களை அமைத்தனர். மறைபரப்புப் பணிக்கு கல்விப் பணி கருவாயிற்று. ஒரு சிலருக்கே கல்வி என்றிருந்த காலத்தில் அனைவருக்கும் கல்வி கொடுத்த பெருமை இவர்களுக்கு உண்டு. சுருங்கக்கூறின் இக்கால இந்தியக் கல்வி வரலாற்றோடு இயேசு சபைக் கல்விப் பணியின் வரலாறும் ஒருங்கிணைந்த ஒன்றாகும். உலகிலேயே கல்வியைப் பற்றியும் அதனைக் கற்றுக் கொடுக்கும் முறை பற்றியும் முதன் முதலாக வெளியிட்ட சிறப்புடையது இயேசு சபை (Ratio Studrorum 1585).

கி.பி. 1542 ல் இந்தியாவில் புனித பிரான்சிஸ் சவேரியாரால் கோவாவில் தொடங்கப் பெற்று பின்பு புனித சின்னப்பர் கல்லூரியாக வளர்ந்த நிறுவனம் உலகில் முதன்முதலில் தொடங்கப்பட்ட இயேசு சபைக் கல்வி நிறுவனமாகும். இப்பெருமை உலகில் வேறு எந்த நாட்டிற்கும் கிடைக்காத பெரும்பேறு. இக்கல்லூரியில் கோவாவைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாது இந்தியாவின் அனைத்து மொழி மாணவர்களும், அயல் நாட்டு மாணவர்களும் கூட கல்வி பயின்றனர். அப்போதே கல்லூரியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்றுள்ளனர். தொடர்ந்து நம் நாட்டின் பல்வேறு இடங்களில் இயேசு சபையினர் தம் கல்விப் பணியைத் தொடர்ந்தனர். இக்கல்வி நிறுவனங்களில் தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சமயப் பாடங்களுக்கு மட்டுமல்லாமல் உலகியற் பாடங்களுக்கும் முதன்மை தந்தனர். முக்கியமாக பிறப்பால் கல்வி மறுக்கப்பட்டோருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

உலகளாவிய அளவில் இயேசு சபையினர் இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப கல்வியில் நவீன புரட்சிக்கு வித்திட்டு வருகின்றனர். உலகெங்கிலும் பல்வேறு துறைகளில் புகழ் மிக்கவர்களாக வியத்தகு சாதனைகளைப் படைத்து வருபவர்கள் இயேசு சபைக் கல்வி நிறுவனங்களில் உருவாக்கப்பட்டவர்கள் என்றால் மிகையாகாது. உலகின் தேவைக்கேற்ப பன்முகப் பணிகளை இயேசு சபையினர் ஆற்றி வந்தாலும் அவர்களை மக்கள் முன் இனங்காட்டி நிற்பது அவர்தம் கல்விப் பணியே.

"நல்லவேளையாக ஐரோப்பிய கிறிஸ்தவப் பாதிரியார்கள் இந்திய நாட்டில் புகுந்த பின்னர் தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் சேரிகளுக்குச் சென்று கல்விக்கூடங்களை நிறுவினர். அவர்கள் அப்படிச் செய்தது தங்களுடைய மதத்திற்கு இழுத்துக் கொள்வதற்காக என்று சொல்வார்கள். ஒருவர் கல்வியற்ற நிலையில் இந்துவாக வாழ்வதைவிட கற்றறிந்த கிறிஸ்தவராக வாழ்வதே மேல் என்று நான் சொல்வேன்" – சிலம்புச் செல்வர் ம.பொ.சி

### முன்னாள் மாணவர் மன்றம்

இயேசு சபைக் கல்வி நிறுவனங்களில் பயின்று பல்வேறு நிலைகளில் உயர் பொருப்புகளை அலங்கரித்தும், தொழில் முனைவோராகத் திறம்படச் செயலாற்றியும் வருகின்ற முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைந்து முன்னாள் மாணவர் மன்றம் என்னும் அமைப்பானது இயேசு சபையினரால் ஏற்படுத்தப்பட்டு உலகெங்கிலும் சிறப்பாக வழிநடத்தப்பட்டு வருவதோடு ஆக்கப்பூர்வமான வழிமுறைகளில் கல்வி வாய்ப்புகளை வழங்கவும், மாணவர் நலனைப் பேணவும் கல்வி நிறுவனங்களைக் கட்டமைக்கவும் வேண்டிய பலதரப்பட்ட ஆலோசனைகள் அலசி ஆராயப்படுகின்றன.

இம்மன்றத்தின் பல்வேறு கட்ட கூட்டங்கள் மாநில அளவில் தேசிய அளவில் உலக அளவில் நடத்தப்பட்டு உலகளாவிய மாபெரும் அமைப்பாக இது செயல்பட்டு வருகிறது.

### முடிவுரை

மாணவர் நலனை மையப்படுத்தும் நோக்கில் மாணவர் – ஆசிரியர் – பெற்றோர் என்னும் மூன்று நிலைகளில் தொடர்புகளை ஏற்படுத்தி மாணவர் மையக் கல்வியை வலியுறுத்துகிறது இயேசு சபை.

மாணவர் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துப் பகிர்வுகளை, கற்றல் மேம்பாடுகளை, தரமான கற்பித்தல் சூழலை உருவாக்கும் நோக்கில் பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஏழை எளிய விளிம்புநிலை மாணவர்களின் வாழ்க்கைச் சூழல் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆக்கப் பூர்வமான வழிகாட்டல் வழங்கப்பட்டு வருகிறது.

மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு பல துறைகளிலும் பயிற்சி அளித்து இன்று இந்த சமுதாயத்தில் அவரவர் துறையில் சிறந்து விளங்க அடித்தளம் அமைத்துக் கொடுத்தவை இயேசு சபைக் கல்வி நிறுவனங்களே. மனிதனை மையப்படுத்திய கல்வி அமைப்போடு, அன்பையும் விதைத்த காரணத்தினால்தான் இயேசு சபைக் கல்வி நிறுவனங்களில் பயின்றவர்கள் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் வெற்றி பெற்று வருகிறார்கள்.

அதற்குக் காரணம் இயேசு சபைக் கல்வி நிறுவனங்களின் கல்விப் புரட்சி என்றால் மிகையாகாது.

**– சூ. அன்புரசன்**

**பட்டதாரித் தமிழாசிரியர்.**

## சமயம் கடந்த சமூகப் பார்வை

### முன்னுரை

"எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும்" என்ற வார்த்தைக்கு ஏற்ப இயேசு சபையைத் தோற்றுவித்த புனித லொயோலா இஞ்ஞாசியார் வாழ்ந்தார். இறப்பிற்குப் பிறகு வரலாறாக மாறினார். இயேசு சபையை நிறுவிய காலத்தில் பிறருக்காக வாழ வேண்டும் என்ற குறிக்கோளுக்கு ஏற்ப எண்ணற்ற சமூகப் பணிகளை அன்று தொடங்கி இன்று வரை செய்து வருகின்றனர். புனித இனிகோவின் பார்வை சமதர்ம சமுதாயமாக இருக்க வேண்டும் என்ற பின்னணியில் ஏழைகளுக்குக் கல்வி, பெண்களுக்குச் சம உரிமை, நோயாளிகளுக்குத் தொண்டு புரிதல், விதவைகளுக்கு மறுவாழ்வு, இளைஞர்களுக்கு வாழ்க்கை புரிதல், அனாதைகளுக்கு இல்லங்கள், மனம் மாறிய யூதர்களுக்கு பராமரிப்பு இல்லம் இவ்வாறாக பல்வேறு ஆக்கப் பணிகளை சமூக அக்கறையோடு செய்து வருகின்றனர். அவற்றை இக்கட்டுரையில் சுருக்கமாகக் காண்போம்.

### புனித இஞ்ஞாசியாரின் சமூகப்பணி

"பிறப்பு தரித்திரமாக இருந்தாலும் இறப்பு சரித்திரமாகட்டும்" என்ற வார்த்தையின்படி தன் தாய் இறந்த பிறகு வளர்ப்புத் தாயால் வளர்க்கப்பட்டதால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை முறையினை அறிந்து கொண்டார். இயேசு சபையை நிறுவிய பிறகு

அருட்தந்தையர்களோடு பல்வேறு சமுதாயப் பணிகளைச் செய்தார். அனாதை மடங்களைத் தொடங்கி நற்பண்புகளைப் போதித்தார். மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளைப் பார்த்து பேசி அவர்களுக்கு தேவையான பணிகளைச் செய்தார். விதவைகளுக்கு மறுவாழ்வு மையங்களை உருவாக்கி சேவை செய்தார். பிரச்சனைகளோடு வந்தவர்களுக்கு வழிகாட்டிகளாக ஆற்றுப்படுத்தும் மையங்களை உருவாக்கினார். ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், இன்னும் ஒரு சில நாடுகளில் யூதர்களை அழைத்து வந்தார்கள். அவர்களைப் பராமரிக்க இல்லங்களைத் தொடங்கினார்.

சர்வாதிகாரத்தின் விளைவால் நாடுகளுக்கு இடையே நடக்கும் போரினால் பல லட்சம் மக்கள் இறந்தனர். இதனால் பலர் அகதிகளாக்கப்பட்டனர். இவர்களுக்கு அன்றே உதவி செய்தார். ஏழை எளிய மக்களுக்கு கல்வியைப் போதித்தார். புனித இனிகோவும், அவருடைய நண்பர்களும் செயல்வீரர்களாகப் பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வந்தனர். அக்காலத்தில் இது சமூகப் புரட்சியை உருவாக்கியது, புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. உலக அளவில் மாபெரும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் காண வித்தாக அமைந்தது.

### தமிழக இயேசு சபையின் சமூகப்பணி

இன்று 374 அருட் தந்தையர்கள், 35 அருட் சகோதரர்கள் மற்றும் 167 இளவல்களோடு தமிழக இயேசு சபை பயணிக்கின்றது. 16 வகையான சமூக மேம்பாட்டு மையங்களை நடத்தி வருகிறது. தலித்துகள், அருந்ததியர்கள், குறவர்கள், பழங்குடியினர், பெண்கள், அனாதைகள், குழந்தைகள், புலம்பெயர்ந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், விதவைகள் மற்றும் மீனவர்கள் இவர்களை உள்ளடக்கிய சமூக அக்கறையோடும் பார்வையோடும் ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வருகின்றது தமிழக இயேசு சபை. சமூக உணர்வு, சமூகக் கடமை, பொறுப்புணர்வு, தனி மனித ஆளுமைகள் மற்றும் தலைமைத்துவப் பண்பில் வளர லசாக் என்ற அமைப்பு பள்ளி அளவில் செயல்படுகிறது. கல்லூரி அளவில் மாணவர்கள் நல்ல பொறுப்புள்ள விதத்தில் வளரவும் வாழவும் AICUF, STAND, RADAR, SHEPHERD போன்ற அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சுயமரியாதை, ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம், சமச்சீர் கல்வி, சம உரிமை, சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் இந்த மதிப்பீடுகளின் இருக்க சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்த கல்லூரியில் படிக்கும் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து சமுதாயப் பணிகளில் ஈடுபட உதவி செய்கிறது.

### தமிழக இயேசு சபையின் சமூக அமைப்புகள்

இன்று தமிழகம் முழுவதும் 10 மாவட்டங்களில் சமூக அமைப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தலித் மக்கள் கல்வி, பொருளாதாரம் வளம் பெற, வேலைவாய்ப்பு, சமூக நீதி கிடைக்க Palmera அமைப்பு தேவகோட்டையை மையமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. சமத்துவம் கிடைக்கவும், சம உரிமைகளும் கிடைக்க கரிசல் என்ற அருந்ததியர் அமைப்பு சிவகாசியில் செயல்பட்டு வந்தது. மலைவாழ் மக்கள் கல்வி, சமூக உரிமை, சமத்துவம் கிடைக்க கொடைக்கானலில் இன்று Peak என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. தலித் மக்களுக்கு மறுக்கப்படும் சம உரிமை, சமூக உரிமை, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், தீண்டாமைக் கொடுமை இவற்றிலிருந்து விடுபட DACA என்ற அமைப்பு மதுரையை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. அடுத்திருப்பவர் முன்னேறத் துணைநில் என்ற விருதுவாக்கோடு அமுது AMUTHU மையம் ஒட்டன்சத்திரத்தில் அருந்ததியர் வாழ்வு பெற ஆக்கப்பூர்வமான பணிகளை முன்னெடுத்து வருகின்றது. வட தமிழகத்தில் PARAN என்ற அமைப்பு ஆதிவாசி மக்களின் வாழ்வில் முன்னேற்றமடைய முழு மனிதனாக வாழவும் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றனர். கல்வி வளர்ச்சி, ஏற்றத் தாழ்வுகளை அகற்ற குறிப்பாக அருந்ததியர்கள், தலித்துகள், நரிக்குறவர்கள் முன்னேற AHAL என்ற அமைப்பு கீழ்பெண்ணாத்தூரை மையமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. புலம்பெயர்ந்தவர்கள் கல்வி, பொருளாதாரம் இவற்றில் மேம்பட உலக அளவில் அருட்தந்தையர்கள் பல்வேறு பணிகளை முனைப்போடு JRS என்ற அமைப்பின் வழியாக பல்வேறு நிதிகளை ஒதுக்கி செயல்திட்டங்களை வகுத்து மக்கள் பணியே மகேசன் பணி என்று நினைத்து பணிபுரிந்து வருகின்றனர். நாடு விட்டு நாடு கடந்து வேலைக்காக வருகின்றவர்களுக்கு JMS என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. இருளர்களின் வாழ்வு வெளிச்சத்திற்கு வர JESIM அமைப்பு செயல்பட்டு வருகிறது. நாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு விதவைகளுக்கும், ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கும் பணிகளை ஆற்றி வருகின்றது கலங்கரை அமைப்பு.

நிறைவாக

அன்பு செய்யப்பட வேண்டும் என்ற இலக்கோடு சமூக சிந்தனையோடு சமயம் கடந்து பல்வேறு மனித நேயப் பணிகளை செய்து வருகின்றனர். ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம் பெறவும் கல்வி, சமூக நீதி, சம உரிமை, சுயமரியாதை, மனித மாண்புகள், அடிப்படை உரிமைகள் கிடைக்கும், சமதர்ம சமுதாயம் உருவாகும், என்ற நம்பிக்கையில் உலக அளவில் அமைதி வளர்ச்சியடையவும், ஏற்றத்தாழ்வுகள் நீங்கவும், சமாதானம் நிலை பெறவும், சகிப்புத் தன்மையோடு அனைத்து மக்களும் வளரவும் வாழவும், அனைவரையும் ஏற்றுக்கொண்டு வாழவும் வழி செய்கின்றனர். வாழ்வது ஒரு முறை வாழ்த்தட்டும் தலை முறை என்ற வார்த்தைக்கு ஏற்ப குழந்தைகள், ஏழை எளிய மக்கள், பெண்கள், அனாதைகள், விதவைகள், புலம்பெயர்ந்தவர்கள், பழங்குடியினர், இன்னும் தங்களது இலக்கு மக்கள் முன்னேற சமூகப் பார்வையோடு இயேசு சபையினர் பல்வேறு பணிகளை செய்து வருகின்றனர். இன்னும் அதிகமாகச் செய்ய புனித இஞ்ஞாசியாரோடும், அவருடைய நண்பர்களான இயேசு சபையினர் ஒவ்வொருவருடனும் இணைந்து நாமும் புதிய சமுதாயம் படைக்கப் புறப்படுவோம்.

- அ. செபாஸ்டின் இராஜேந்திரன்,

பட்டதாரிக் கணித ஆசிரியர்



ஓவியம் : பூண்டி ஜெயராஜ், ஓவிய ஆசிரியர்



ஓவியம் : ஆ. பாலாஜி XII E

## இயற்கை இறைவனின் இருக்கை

இறைவனின் புன்னகை
பூக்கள்
பறிக்காதீர்கள் !

இலைகளையும்
உதிர்க்காதீர்கள்
இறைவன் கண்ணிமைக்கிறார் !

உங்களுக்காகத்தான்
குடைபிடிக்கிறார் கடவுள்
மரங்களை முறிக்காதீர்கள் !

மெல்லிசைகள்தானே
மீட்டுகிறார் ஈசன்
பின் ஏன் அவரின்
விரல்களை வதைக்கிறீர்கள்
கிளைகளை ஒடிக்கிறீர்கள் ?

நிழலாகிறது
அழகாகிறது
உருவாகிறது
உணவாகிறது
வீழ்ந்தாலும்
தாவரங்கள்
விறகாகிறது
எருவாகிறது !

மரங்கள்
ஆதரவற்றோர்
ஓய்வெடுக்கும்
ஆசிரமம்

வீடிழந்தோர்
பாய்விரிக்கும்
படுக்கை அறை
பிச்சைக்காரர்
இச்சைகொள்ளும்
பள்ளியறை !

மரங்கள்
பச்சை நிறத்து
பழக்கூடை
பறவைகளின்
இசை மேடை
கால்நடைகளின்
களைப்பாறும் இல்லம்
கடவுளுக்குச் செல்லம் !

பூமி
நடப்பதற்குப் பாதை
படுப்பதற்குக் கட்டில்
விதைப்பதற்குத் தோப்பு
புதைப்பதற்கு வாய்ப்பு.

மரங்கள்
மலைகள்
மனிதர்கள்
மிருகங்கள்
எத்தனை நிலைகள்
எத்தனை சுமைகள்
அத்தனை சுமையும்
சுகமான வரங்கள்
பூமிக்கு...

தாங்கிய கைகளைத்தானே
ஓங்கி அடிக்கிறோம்!

முதலில்
வீடு முளைத்தது – பின்
ரோடு அடுத்தது – அவை
காடு அழித்தது – ஆம்
கேடு நிலைத்தது.

பூமியின் மேனியில்
புற்றுநோய் ஆச்சு
சாமியின் நெற்றியில்
சாக்கடை வீச்சு.

கொத்திய இடத்திலே
குப்பையாய் வீழாமல்
ஊற்றானது பூமி
காயப்பட்டு
வெட்டிய நிலத்திலே
வெறுமையாய் ஆகாமல்
நாற்றானது – ஆக
நிச்சயமாய்ச் சொல்லுவேன்
சுற்றும் இப்பூமியே
சத்தியமாய்ச் சாமி !

மழைநீர்
தீர்வுகள்
உலகின் பசுமைக்கும்
விழியின் குளுமைக்கும்

மலைகள்
மார்புகள்
நதிப்பால் ஊட்டும்
தாயாக நான்
சேயாக நீங்கள்

இறைவனாகிய
என் தேகம்
முக்கால் பாகம்
நீர் நிரப்பிய
மீன் தொட்டி

கால் பாகம்
மண்பரப்பிய
பூந்தொட்டி
அதை மறந்து
சாக்கடை வீசுவீர்களா
சமுத்திரத்தில் கொட்டி.

அன்புப் பிள்ளைகள்
உங்களை நினைத்து
அவ்வப்போது
ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன்
அவைகள்தான்
கண்மாயும்
கால்வாயும்
ஊரணியும்
மழைக்காலத்தில் நிகழும்
நீரின் பேரணியும்.

காற்றும்
கடவுளும்
கண்ணுக்குத் தெரிவதில்லை
தெரியுமா
கண்ணுக்குத் தெரியாத காற்றே
கடவுளாகிய நான் தான்.

தென்றல் இனிப்பதுவும்
தென்னை இசைப்பதுவும்
கடவுளின் விருப்பத்தில்
காற்றின் இயக்கத்தில்.

தென்றலாகி
நான் ஓடிவந்தால்
நறுமணமும் கூடவரும்

வராவிட்டால்
மரணம்தான் தேடிவரும்.

சூறாவளியாய்ச்
சுழன்றடிக்கும் போதுதான்

மரங்கள் தனது
இலை உதடுகளை
ஆவேசமாக அசைத்து
பச்சை பச்சையாய்
கெட்டவார்த்தையில்
திட்டித்தீர்க்கின்றன
என்னை.

அடித்துச் சொல்வேன்
ஆகாயம்
உங்களுக்கெல்லாம்
ஆதாயம்

காரணம்
ஆகாயத்தின் உயரம்
எனது உள்ளம்
அதன் அகலம்
இறைவன் எனது இதயம்.

இடி அடிக்கட்டும்
மின்னல் எரிக்கட்டும்
சோகம் மேகமாகி
அழுகின்றேன்
அதனாலென்ன
மழையாகி விழுகின்றேன்
அதுபோதும்
மனது நிறைகின்றேன்.

ஆகாய மழையைப்
பூமிக்கு
அனுமதிக்கச்சொல்லி
நான் இடும்
அக்கினிக்
கையெழுத்துதான்
மின்னல் கீற்று.

இரவை முடிக்கச்சொல்லி
உறவை நிறுத்தச்சொல்லி
எத்தனைமுறை
ஆகாயத்தாளில்
முற்றுப்புள்ளி வைத்து
கட்டுப்படுத்தியிருப்பேன்
தெரியுமா?
சந்தேகமிருந்தால்
விண்மீன்களை அழைத்து
விசாரித்துக்கொள்ளுங்கள்.

நீங்கள்
சாதிக்கிறபோதெல்லாம்
பறக்கும் பறவைகளின்
இறக்கைகளை
இரவல் வாங்கிக்கொண்டு
உங்களுடன்
கைகுலுக்கிக் கொள்கிறேனே
சந்தோசம் தானே?

ஆதவன் ஒளி
ஆண்டவன் விழி
பறவைகள் ஒலி
இறைவனின் மொழி
ஆண்டவன் வழி
எப்போதும் தனிவழி

சூரியன் மட்டுமே
மானுட குலத்தின்
பரம்பரைச் சொத்து.

வெயில்
இறைவன்
இவ்வுலகுக்கு
எழுதிக்கொடுத்த
உயில்

காதலிமுகம்
காணமுடியாத
வேதனை இரவுகளில்
பதட்ட மடையாதீர்கள்
பௌர்ணமியாய் வருகிறேன்.
கருணை உள்ளம்
வேண்டுவோர்
கடிதம் எழுதுங்கள்
ஈரமேகங்களை
தாமதம் செய்யமால்
இறக்குமதி செய்கிறேன்.

வைரப்பொட்டுக்கள்
வானம் முழுவதும்
விண்மீன் துகள்களாய்
விரவிக்கிடக்க
நெற்றிப் புறத்தை
இன்னும்
வெற்றுப் பரப்பாகவே
வைத்துக் கொண்டிருப்பாயா
விதவைத் தங்கையே?

தாலிக்கொடிக்கு
தங்கமா வேண்டும்?
மின்னலுடன் வருகிறேன்
மேடையிலே கணவனுக்கு
மாலையிடப் போகிறாயா?
சந்தோசம்
வானவில் தருகிறேன்.

இயற்கையினைப் படைத்து
இயற்கையோடு கலந்து
இயற்கையாகவே வாழும்
இறைவன் இதோ
சொல்லாமல் சொல்கிறான்
என்னிடம் கேளுங்கள்.

இறைவன்தான் இயற்கை
இயற்கைதான் இறைவன்
அறிந்து கொண்டீர்களா
ஆறறிவு படைத்தவர்களே?
ஆகவேதான்
அறிவுறுத்துகிறேன்
இறைவனின் அதிமிக
மகிமைக்காக
இனிமேலாவது
இன்னும் அதிகமாக...
இன்னும் அதிகமாக...
இயற்கையை நேசியுங்கள்
ஏனெனில்
இயற்கை இறைவனின் இருக்கை...

- கவிஞர். எல். பிரைட்
பட்டதாரி அறிவியல் ஆசிரியர்



## அறிவாயுதம் ஏந்துவோம்

ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் பிரச்சினை என்றால் என்ன செய்வார்கள்? ஆவேச சண்டை போடுவார்கள். ஆதிகாலத்தில் வில் அம்பு, பின்பு துப்பாக்கிகள், பீரங்கிகள். இன்று வேதியியல், உயிரியல், கதிர்வீச்சு ஆயுதங்கள் என்று வளர்ந்து நிற்கின்றன.

உயிரி ஆயுதங்களைப் பொறுத்தவரை நேரடிப் போர் முறை இல்லை. சின்ன ஊடுருவல் மூலம் வைரஸைப் பரப்பினால் போதும். அந்த வைரஸைக் கொண்டே பொருளாதாரம், வாழ்வாதாரம் அனைத்தையும் நிர்மூலமாக்க முடியும். இப்போது இன்னொரு கேள்வி எழுகிறது. உலகமயமாக்கப்பட்ட சூழலில் இது அந்த நாட்டிலேயே பாதிப்பு ஏற்படுத்த வாய்ப்பு இல்லாமல் போகுமா?

### வரலாறு என்ன சொல்கிறது?

பதினான்காம் நூற்றாண்டில் ஆசியாவின் மையப் பகுதியில் வாழ்ந்த டாரிடர்கள் என்ற ரஷ்யாவின் ஒரு பிரிவு மக்கள் ஜெங்கிஸ்கான் வழித்தோன்றல்கள் தங்களது நாட்டின் எல்லை விரிவாக்கத்தின் போது வலிமையான நாடுகளை வெல்ல உயிரியல் போர் என்னும் குறுக்கு வழியை முதலில் தேர்ந்தெடுத்தனர். பெரியம்மையால் இறந்த உடல்களை CATADULT என்னும் கவண் இயந்திரங்கள் மூலம் எதிரி நாட்டு எல்லைக்குள் வீசுவார்கள். அங்கே பரவும் VARIOLA வைரஸ் மூலம் கொள்ளை நோயைப் பரப்பி பின் அதிரடியாக நுழைந்து அதைக் கைப்பற்றுவார்கள். தங்களது வீரர்களுக்கு சிதைக்கப்பட்ட குறைந்த சக்தியுள்ள வைரஸ் மூலம் Innaculation method முறையில் நோய் எதிர்ப்பு சக்திகளையும் உருவாக்கும் முறையைப் புழக்கத்தில் வைத்திருந்தார்கள். 1500 களில் துருக்கிக்கும் சிரியாவிற்கும் நடந்த போரின்போது துருக்கி Tularania என்னும் முயல் காய்ச்சலை உருவாக்கக்கூடிய Francisella Tularensis என்னும் பாக்டீரியாவைப் பரப்பி எதிரிகளின் தோல், நுரையீரல், கண்கள், நிணநீர் சுரப்பிகள் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தினார்கள். எளிதில் பரவும் Clavicaps purpura என்னும் பூஞ்சை காளான்களால் செறிவூட்டப்பட்ட கோதுமை ஓட்ஸ், பார்லி, ராய் தானியங்களை அந்நாடுகளில் புழக்கத்தில் விட்டார்கள். இந்த தானியங்களால் செய்யப்பட்ட ரொட்டி போன்ற உணவுப் பொருட்களை உண்ட மனிதர்களுக்கு வயிற்றுப்போக்கு, நிணநீர் கோளாறுகள், உச்சகட்டமாக மனச்சிதைவு நோய் போன்றவை பாதித்தன.

பின்னாளில் 1754 முதல் 1767 வரை பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடந்த போரிலும் இவை புழக்கத்தில் இருந்தன. 1930களில் சோவியத் யூனியன் பெரிய அளவில் இந்தப் புஞ்சைகளையும், பாக்டீரியாக்களையும் உற்பத்தி செய்து உஸ்பெகிஸ்தானில் உள்ள VozRozhdenieya என்னும் 200 கிலோ மீட்டர் சதுரப்பரப்புள்ள தீவில் வெற்றிகரமாக சோதனைகளையும் செய்தார்கள். 1960களில் தீவைச் சுற்றியுள்ள கடல் நீர் வற்றி முழு நிலப்பரப்புடன் இணைந்து தீவே காணாமல் போனது. இந்த உயிரி ஆயுதத்தில் கண்ணுக்குப் புலப்படாத மைக்ரோ ஆர்கனிஸம்கள் என்னும் தாவரங்கள், விலங்குகளில் கொடிய தாக்கத்தை ஏற்படுத்தும் பாக்டீரியா, புஞ்சை, வைரஸ், நச்சுயிரிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஊடுருவிய ஒரு சில மாதங்களிலேயே பெரிய அளவில் விவசாயத்தை அழிக்கவும், உற்பத்தியைச் சீரழிக்கவும், பற்றாக்குறையை ஏற்படுத்தவும், தேவை-உற்பத்தி இவற்றிற்கிடையேயான ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தவும் பெயர் தெரியாத புதிய புதிய கொள்ளை நோய்களையும் ஏற்படுத்தவும் கூடியது இது. சமீபத்தில் 2006 இல் அமெரிக்க தபால் அலுவலகங்களில் வந்த சில பார்சல்களில் வெள்ளை நிற ஆந்த்ராக்ஸ் ஸ்போர்ஸ், சின்னம்மை ஸ்போர்ஸ் இருந்தது. இதைக் கையாண்ட ஐவர் இறந்தனர் 25 பேர் பாதிக்கப்பட்டனர். இதைத் தடுக்க உலக நாடுகள் இதுவரை என்ன செய்துள்ளன?

1928ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி 65 நாடுகள் ஒன்றிணைந்து பிரான்ஸ் தலைமையில் ஜெனிவா புரோட்டாகால் என்ற பெயரில் ஒரு போர்த் தடை தீர்மானம் ஒன்றை இயற்றினர். ஆனால் நச்சுவாயு, கிருமிகள், ஆந்த்ராக்ஸை வைத்துக் கொள்ளலாம், பிற நாட்டின் மீது பயன்படுத்தக் கூடாது என்று மட்டும் சொல்லி இருந்தனர். பின்னாளில் 1972இல் உயிரி ஆயுதத் தடை என்றும் 1993இல் வேதியியல் நச்சுப்புகை ஆயுதத் தடை என்றும் பரப்புரை செய்தாலும் பெரிய அளவில் இதனால் பயன் இல்லை.

### இந்தியாவின் அனுபவம் எப்படி?

1960களில் நாம் சந்தித்த சோதனை பலருக்கு மறந்து இருக்கலாம். PL 480 திட்டம் என்ற பெயரில் நமது பஞ்சத்திற்காக அமெரிக்கா அனுப்பிய கோதுமை தானியங்களுடன் கப்பலிலிருந்து கலந்து ஊடுருவிய பார்த்தீனியம் ஹிஸ்போரஸ் என்னும் நச்சு செடி இன்றுவரை நம்மைப் பாதிக்கிறது. அப்போதே கரீபியன் தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாவில் தடை

செய்யப்பட்டது. அதே காலகட்டத்தில் இங்கே நாடு முழுவதும் ஹெலிகாப்டர்கள் மூலம் தூ வப்பட்ட சீமைக் கருவேலமர விதைகள், ‘பஞ்சம் பிழைச்சுக்குவான்’ என்று கூறி நம்மை நிரந்தர பஞ்சத்தில் தள்ளிய ஒன்று. ஏறக்குறைய அறுபது ஆண்டுகளில் தமிழகத்தில் மட்டும் 12 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் ஆக்கிரமித்து 175 அடி ஆழம் வரை உள்ள நிலத்தடி நீரை கபளீகரம் செய்து நம்மை வளர்ச்சியிலிருந்து வறட்சியை நோக்கிக் கொண்டு செல்கிறது. ஒரு கிலோ Biomass அதாவது உயிரி உருவாக நாலு லிட்டர் தண்ணீர் தேவை. சீமைக் கருவேல மரங்கள் மண்ணில் உறிஞ்சியது போக காற்றில் உள்ள ஈரப்பதத்தையும் உறிஞ்சும் ஆற்றல் பெற்றவை. தற்சார்பு, தன்னிறைவு என்ற அனைத்தையுமே கிராமங்களில் அழித்துவிட்டு விறகு வியாபாரிகளும், தற்சார்பு இல்லாத கிராமத்தில் அறிந்த தானிய பயிர் வகைகளை வெளியில் இருந்து கொண்டு வந்து விற்கும் வணிகர்கள் மட்டுமே இதனால் பயன் பெறுவர். தமிழகம் தலை நிமிர வேண்டுமென்றால் வேரோடும், வேரடி மண்ணோடும் சீமைக்கருவேல மரங்களை அகற்ற வேண்டும். சமீபத்தில் வியட்நாமைச் சேர்ந்த Dr. டாம் என்பவர் கண்டுபிடித்த ஒரு ஏக்கர் சீமைக்கருவேலத்தை அழிக்க 4000 ரூபாயில் முடியக்கூடிய ‘அக்ரோ கேர்’ என்ற மருந்து வெகுவாக உதவுகிறது.

## இப்போதைய நெருக்கடி என்ன?

இன்னமும் சீனாவின் ஊகானிலிருந்து புறப்பட்ட கொரோனா அலை அலையாய் தாக்கிக் கொண்டிருக்கும் போதே மற்றொரு உயிரி ஆயுதம் நமது தூக்கத்தைக் கெடுக்கிறது. இதன் துவக்கமும் சீனாதான். சீனாவிலிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு கொண்டிருக்கிற மர்ம விதைப்பைகள்தான் அவை. அமெரிக்காவில் மட்டும் இருபத்தி எட்டு மாகாணங்களிலும், கனடா, நியூசிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் ஊடுருவியுள்ள மர்ம விதைப்பைகள் யாரும் கோரவில்லை, யாரும் பணம் கொடுக்கவும் இல்லை. ஆனால் விவசாயிகளின் முகவரிகளுக்கு பொம்மைகள் என்றும் தங்கம் என்னும் லேபில் ஒட்டி வந்துள்ளவை அவை. இந்த சந்தேக பார்சல்களை அமெரிக்காவின் விவசாய இலாகா ஆராய்ந்ததில் ஏறக்குறைய 14 வகையான விதைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்பருத்தி விதைகள், சுகந்தி விதைகள், புதினா குடும்பத்தைச் சேர்ந்த ரோஸ்மேரி விதைகள், தள தாழை வாதமடக்கி வகைச் செடிகள், தக்காளி, சூரியகாந்தி, முட்டைக்கோஸ், பிராக்கோலி, கொத்தமல்லி, பரட்டைக் கீரை விதைகள் போன்றவை. இந்த விதைகள் பூமியை அடையும் போது அங்கே ஏற்கனவே உள்ள மண்ணின் தாவரங்களை அழித்து, சுற்றுச் சூழலை அழித்து, இனம் தெரியாத கிருமிகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவை. நம்முடைய உணவுச் சங்கிலியில் ஊடுருவக் கூடியவை. ஓரிரு மாதங்களிலேயே நமது விவசாயத்தையே முடக்கக் கூடிய பேராபத்து நிறைந்தவை.

இந்திய தேசிய விதைகள் இயக்கத்தைச் சேர்ந்த உயர் அலுவலர் திரு. இந்திரா சேகர் சிங், பிசினஸ்லைன் பத்திரிக்கைப் பேட்டியின்போது கூறிய விபரங்கள் அதிர்ச்சிகரமானவை. “சீனாவும் மற்றும் சில வெளிநாட்டு நிறுவனங்களும் இந்தியாவில் உள்ள முளைமக்கூழ் (germ plasm) மற்றும் மரபணு வளங்கள் (genetic Resourse) பற்றிய விரிவான ஆராய்ச்சியினைக் கடந்த 20 முதல் 25 வருடங்களாகச் செய்து வருகின்றன. இந்தியாவின் பயிர் முளைமக்கூழ் உயரங்கள் எவ்விதத் தடையுமின்றி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவர் மேலும் கூறுகையில், இந்தியக் கம்பெனிகள் ஒரு விதை நிறுவனத்தை சீனாவில் அமைக்க முடியாது. ஆனால், இந்தியாவில் சீனர்களால் அமைக்க முடியும். இந்த வெளிநாட்டு விதைகளை அரசின் அனுமதியின்றி இறக்குமதி செய்யக் கூடாது என்பது சட்டம். ஆனால், இந்தியாவில் இதை எளிதாகக் கடக்க முடியும் என்பது நிதர்சனம். இத்தகைய விதை பயங்கரவாதம் உணவுப் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். சீனாவிடம் மிகவும் முன்னேறிய தொழில் நுட்ப வசதிகளுள்ளன. அதனால் இந்திய உணவு உற்பத்தியை அழிக்கும் திறனை வஞ்சகமாய் பெற்றுள்ளது. இந்த விதை மாசுபாடுகளை (Seed Contamination) உடனடியாகத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்திய தேசிய விதைகள் இயக்கம் மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கும்” என்றார் அவர்.

இந்தியா இப்போது விதை மாசுபாடு, களைக்கொல்லி சகிப்புத் தன்மையுள்ள (Herbiside Tolerant) விதைகளை ஊடுருவல் செய்வதற்கும் ஏற்ற ஒரு நன்கு வரையறுக்கப்பட்ட வழியைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 50 லட்சம் பாக்கெட்டுகள் அவற்றின் உத்தேச சந்தை மதிப்பு 300 கோடி ரூபாய்கள் உள்ள களைக்கொல்லி சகிப்புத் தன்மை உடைய BT பருத்தி விதைகள் அதாவது Bacillus Thuringiensis என்கிற பாக்டீரியாவின் DNA விலிருந்து மரபணு மாற்றம் செய்யப்பட்ட டிரான்ஸ் ஜெனிக் பருத்தி விதைகள் ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா மாநிலங்களில் சந்தைப் படுத்தப்பட்டுள்ளன என்று இந்திய தேசிய விதைகள் இயக்கம் கூறும் கூற்று.

இந்திய அரசால் 2002-இல் முதன்முதலாக அங்கீகரிக்கப்பட்ட ஒற்றை மரபணு உயிரித் தொழில்நுட்பம் தான் BT பருத்தி விதைகள். நூறு உறுப்பினர் நாடுகளைக் கொண்டு 1924 இல்

ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச விதைச் சோதனைகள் கூட்டமைப்பின் எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்திய தேசிய விதைகள் இயக்கமும் இந்திய விவசாயிகளுக்கு தபால் நச்சு விதைப்பைகள் பற்றி ஓர் எச்சரிக்கையை விட்டிருக்கிறது.

நெதர்லாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட உயிர்வேதியியல் ஆயுத ஒழிப்பு தடுப்பு இயக்கத்தின் முன்னாள் தலைமை அதிகாரியும், ஓய்வு பெற்ற இந்திய ராணுவ அதிகாரியும், கள நிபுணருமான கர்னல் GHR நாயுடு அவர்கள் பத்திரிக்கைச் செய்தி ஒன்றில் இவ்வாறு கூறுகிறார். “சீனா 1972 களிலேயே இந்தப் பரிசோதனைகளைத் துவங்கி விட்டது என்றும், இந்த முன்னேறிய சாத்தியக் கூறுகள் வழியாக அவற்றின் நச்சு விதைகளை அகன்ற சீனா-இந்திய எல்லை வழியாக எளிதில் கடத்திச் செல்லவும் முடியும்” என்கிறார்.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

அமேசான், பிளிப்கார்ட் வழியாக நாம் செய்யும் அத்தனை பரிவர்த்தனைகள் மூலமும் நம்முடைய தனிப்பட்ட விபரங்கள் ஹேக்கர்ஸ் மூலமோ அல்லது வேறு சில ஏஜென்சிகள் மூலமோ கண்ணுக்குத் தெரியாத எதிரிகளிடம் உள்ளன. யாராவது கோராமலோ அல்லது பணம் செலுத்தாமலோ ஏதாவது நச்சு விதைப்பைகள் உங்கள் முகவரியில் பெற்றால் உடனே ICAR க்கு அதாவது இந்தியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சுரல் ரிசர்ச் அமைப்புக்கோ அல்லது வேளாண்மைத் துறை அமைச்சகத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அந்த விதைப் பைகளைக் குப்பைத்தொட்டியில் போடக் கூடாது. விதைப்பைகளைப் பிரிக்கக் கூடாது. இந்தியாவில் 101 இடங்களில் ICAR நிறுவனங்களும் 71 வேளாண்மை பல்கலைக் கழகங்கள் உள்ளன. அருகிலுள்ள சூழலியல் அமைப்புகளை நாடலாம். இதன் தலைமை அலுவலகம் புதுதில்லியில் கிரிஷி பவனில் உள்ளது. அவர்கள் சொல்லும் முகவரிக்கு சீலிட்ட கவர் மூலம் கவனமாகத் திருப்பி அனுப்ப வேண்டும்.

இறைவன் படைத்த உலகினையும் உலக உயிர்களையும் எவ்விதக்கேடும் துயரும் சூழாமல் தூய இஞ்ஞாசியாரின் துணிச்சலோடும் வீரத்தோடும் அவரைப்போல் நாடும் நகரும், ஊரும் உறவும், நட்பும் நலனும் காத்துநிற்கும் போர் வீரர்களாய் நாம் மாறவேண்டியது காலத்தின் கட்டாயம். நாட்டுமக்களனைவரும் நாடுகாக்க ஒன்றுபட்டு துணிந்து அறிவாயுதம் ஏந்தி நின்றால் பகைநாடுகளின் எந்த உயிரி ஆயுதமும் வஞ்சகமும் நம்மை அணுகவே அணுகாது.

**–தி. ஜான் பிரிட்டோ சவரிநாதன்**
**பட்டதாரிக் கணித ஆசிரியர்**

## வேர்களை மறவாத பூக்களே

வண்ணங்களால் வாசனையால்
வானம்தொட பூத்திருக்கும் பூக்களே!
உயிர்தந்து தாங்கும் வேர்களின்
வியர்வையும் உழைப்பும் தெரியுமா?
உங்கள் சுதந்திர மலர்தலுக்கு
மண்ணுள் எத்தனை போராட்டங்கள்....
வேர்களை மறவாத
பூக்களின் வாழ்வுதான் வாழ்வாகும்
வேர்களை மறந்த பூக்களின் வாழ்வோ
வீழ்வாகும் உணர்வீர்.
பிதாவின் அன்பும் பெற்றோரின் பண்பும்
ஒருநாளும் மறவாத இறைமகனும்
இறைமகனின் அநீதிக்கெதிரான புரட்சி
உலக மக்களுக்கான எளிய வாழ்வு
மண்ணில் விண்ணுலகம் கண்ட ஆன்மீக வாழ்வு
ஏற்றத்தாழ்வுகளைப் புதைத்த சமத்துவம்
உயிர் முதற்பொருளாம் அன்பு
இவையாவையும் ஏற்ற இஞ்ஞாசியாரின்
போர்க்களத்தில் பூக்களைப் பறிக்கவைத்தது
மனிதம் வாழ்வாக்கும் புனித வாழ்வாம்.....

**– ஜா. அமலன் பெர்னாட்ஷா**
**பட்டதாரித்தமிழாசிரியர்**




ஓவியம் : இரா. அஜய் கண்ணன் XII A1

## புத்தக மதிப்புரை

நூல் பெயர்: காயம் போற்றும் காவியம்

ஆசிரியர்: அருட்தந்தை சூ.ம.ஜெயசீலன்

வெளியீடு: பாரதி புத்தகாலயம்

பக்கங்கள்: 134

விலை: உரூ.140

இப்படி ஒரு புத்தகம் எழுதவேண்டுமென்று பேனா பிடித்தபோதே, நூலாசிரியர் சூ.ம.ஜெயசீலன் அவர்கள், காயங்களுக்கு மருந்துபோடத் தொடங்கிவிட்டதாகவே நான் உணர்கிறேன்.

பக்கம் பக்கமாக கட்டுரை எழுதிக்குவிக்கிற புத்தக உலகில், மனதுக்குப் பக்கமாக 18 கட்டுரைகள்.

18 வியத்தகு மனிதர்களின் வாழ்க்கையைப் பதிவு செய்திருக்கிறது இந்நூல்.

புத்தகம் புரட்சி செய்யும்! என்று எப்போதும் நான் நம்புவேன். இந்த நூலின் 18 கட்டுரைகளும், உண்மையில் புரட்டுகையிலேயே புதுப்புரட்சி செய்துவிடுகின்றன.

சொல்லமுடியாத துயரங்கள் இருந்தபோதும், ஆயிரம் கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்தானே எடிசன்! செருப்பு தைப்பவனின் மகனாய்ப் பிறந்தபோதும், அமெரிக்க அதிபராக உயர்ந்தாரே லிங்கன்! எதிரிகளை நடுங்க வைக்கும் மாவீரனாகத் திகழ்ந்தானே அலெக்சாண்டர்! அகிம்சையால் ஆயுதம் நொறுக்கினாரே காந்தி! உங்களுக்குத் தெரியுமா? என்பதெல்லாம் போதும்.

நமக்குள் உற்சாகம் நிரப்ப, முன்னோர்களது வாழ்க்கை இத்தனை காலம் உழைத்தது போதும்.

இனி வளரும் பிள்ளைகளுக்கு உற்சாகமும் ஊக்கமும் கொடுக்க, இந்த நூலின் 18 புதிய சாதனையாளர்களின் (இதுவரை அதிகம் அறியப்படாதவர்கள்) வாழ்க்கையை எடுத்துக்காட்டுங்கள்! இவர்கள் உண்மையில் எடுத்துக்காட்டுகள்!

மருத்துவ வரலாற்றில் இதுவரைக்கும் 7 பேருக்கு மட்டுமே வந்துள்ள ஒரு புற்றுநோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

அந்த நோயால் பாதிக்கப்பட்ட 17 வயது சிறுமி ஆல்லிசனிடம், மருத்துவர் சொல்கிறார் 350 கோடி பேரில் உங்கள் ஒருவருக்குத்தான் இந்த நோய் வந்திருக்கிறது என்று,

அப்படினா நான் அதிர்ஷ்டசாலி எனச் சொல்லுங்கள் என்று நம்பிக்கை உதிர்த்த அவள், இருபது வயதில் மரணித்துப்போகிறாள்.

அவள் நம் வாழ்க்கைக்கு எப்போதும் புன்னகையுங்கள் எனும் தெம்பு டானிக் கொடுத்துப்போவதை புன்னகைக்கும் பூவிழியாளை வாசிக்கிறபோதே, நம்மால் உணர முடியும்.

இதற்குமேல் முயற்சிக்க வேண்டாம் என்று பேசுகிறவர்களுக்கு மத்தியில், முயற்சியைக் கைவிடுதல் என் விருப்பவிடையில் எப்போதும் இல்லை என்று முயன்று முன்னேறுகிற ரமோன். தூரம் தொலைவில்லை என்று வெற்றியின் விலாசத்தை அடையாளம் காட்டுகிற சாதனையாளர்.

புத்தகம் நிறைய சாதனையாளர்கள். சோதனைகள் கண்டு வாழ்வில் ஒதுங்கிவிடாது, சோதனையிலேயே சாதனைகள் செய்து முடிக்கும் போராளிகள்!

தன் கையே தனக்குதவி! என்கிற முதுமொழி இவருக்கு முழுவதும் பொருந்தும். ஆழமான பள்ளத்தாக்கில், ஐந்து நாட்கள் மரணத்துடன் போராடி, 360 கிலோ எடைகொண்ட பாறையினால் கை நசுக்கப்பட்டநிலையில், தன் ஒரு கையாலேயே இன்னொரு கையை அறுத்தெறிந்துவிட்டு புத்துயிர் பெற்று புதுநடை போட்ட ஆரோன் ரால்ஸ்டனின் வாழ்க்கை நம்பிக்கையின் அடையாளம்.

நீர்ச்சறுக்கு போட்டியின் சாதனைமங்கை பெத்தன், 14 அடி நீளமுள்ள புலிச்சுறா தன் இடது கையை கடித்தழித்தபோதும், மருத்துவமனையில் இருந்து இரு கைகளோடே வந்தாள். ஒன்று சதையால் ஆன வலது கை. மற்றொன்று என்றுமே குறையாத நம்பிக் கை.

வலதுகையும், இடறாத நம்பிக்கையும் கொண்டு சாதித்த பெத்தன் இன்னொரு அதிசயம்.

இந்தமாதிரி புத்தகங்களை வாசிப்பதோடு நிறுத்திவிடாமல், புத்தகங்களோடு வசிக்கிறபோது நமக்குள்ளும் மறுமலர்ச்சி தோன்றும் என்பது மறுக்கமுடியாத உண்மை!

நோய் ஒரு கொடை! தறிகெட்டு ஓடும் வாழ்க்கையில் அது ஒரு மெல்லிய வேகத்தடை! என்று கவிப்பேரரசு வைரமுத்து எழுதியிருப்பார். இங்கே ஒரு விசித்திர நோய். ஜெனிபரின் வாழ்க்கையில் ஒரு

மெல்லிய வேகத்தடை அல்ல. அவள் வாழ்வதற்கே தடை. மயால்ஜிக் என்செபலோமையிலடிஸ் மருத்துவத்திலேயே இதற்கு சரியான விளக்கமும் மருந்தும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. படுத்த படுக்கையாய்க் கிடக்கும் ஜெனிபர், நோய்க்கு புது அகாரதி போடுகிறாள். தவறான புரிதலில் மருத்துவம் செய்யப்படும் கரீனாவை மீட்க, தன்போலவே படுத்த படுக்கையாய் இருப்பவர்களை ஒன்றிணைக்கிற சம்பவம் புரட்சிகர விடியல். நிச்சயம் படிக்க வேண்டிய புதுவரலாறு.

தன் மாணவர்கள் செய்யும் தவறுக்காக, தன்னைத் தண்டித்துக்கொள்ளும் ஓர் ஆசிரிய அதிசயம் ஜோல்னா ஜவஹர். ஆசிரியரின் இளமைக்காலம்

கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை!

என்ற ஔவையின் வரிகளுக்கு உயிர்கொடுத்த உணர்வைக் கொடுத்தது. பெயரில் என்ன இருக்கிறது! என்று கேட்கும் பொதுப்புத்திக்காரர்களுக்கு உறைக்கிறமாதிரி பெயரில் தான் எல்லாம் இருக்கிறது என்பதை ஜவஹர் ஆசிரியரை சந்திக்கும் முயற்சியில் புரிய வைக்கிறார் நூலாசிரியர்.

வாழ வேண்டிய பிள்ளைகள், இனவெறிக்கு ஆட்பட்டு, சிதறி நின்றபோது குழுக்களாகப் பிரிந்து கிடந்தவர்களை மனிதநேயம் என்ற ஒற்றை நூலால் சேர்த்து தைக்கும் ஆசிரியை எரின் வாழ்க்கையும், ஆசிரியர் ஜவஹர் வாழ்க்கையும் ஆசிரியர்கள் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய காவியம்.

இன்னும் இன்னும் நம்பிக்கையும், உற்சாகமும், விடாமுயற்சியும் ததும்பிக்கிடக்கிறது இந்நூலில்.

உலகில் தடுமாறி விழுந்து, தடம் மாறிப் புரண்டு, அடையாளமின்றித் தொலைந்து, தவறுகளை உணர்ந்து, தன்னம்பிக்கையுடன் வீறுகொண்டு எழுந்து, வியக்கும் வண்ணம் சாதித்து எழுந்த சாதனையாளர்களின் வாழ்க்கையை, அதே உணர்வுடன், உயிர்ப்புடன், உத்வேகத்துடன் விவரிக்கிறது இந்நூல்.

ஓர் உண்மையான கதாநாயகன் அவனது உடல்வலிமையை அல்ல, மனவலிமையை வைத்தே அடையாளம் காட்டப்படுகிறான்! என்பதை உணர்த்தும் அர்ஜீனா விருதாளர் சந்தீப் சிங் மாதிரியான தன்னம்பிக்கை மனிதர்களைப் பற்றி, சுவை குறையாமல் வார்த்தைகளால் பரிமாறியிருக்கிறார் நூலாசிரியர் சூ.ம.ஜெயசீலன்.

போரில் ஏற்பட்ட காயம் இனிகோவை தூய இஞ்ஞாசியாராக மாற்றியதுபோல இந்நூலின் கா(வி)யநாயகர்களும் தங்களைச் செதுக்கி வரலாறாய் மாறியவர்கள். நாமும் சோதனைகளைக் கடந்து வேதனைகளை வென்று சாதனையாளர்களாக உயர வளர இந்நூல் வழிகாட்டியாக அமையும்.

எத்தனை தடை வந்தாலும், காயப்பட்டாலும் காவியம் படைக்க முடியும் என்று வாழ்ந்திருக்கிற மனிதர்களை நீங்களும் சந்திக்க வேண்டுமா?

காயம் போற்றும் காவியம் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுங்கள். வாழ்க்கையைப் புரட்டிப்போடும் செய்திகள் உள்ளேயிருக்கின்றன.

நீங்கள் உங்களது ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், அன்பிற்குரியவர்கள் அனைவருக்கும் பரிசில் வழங்கி, படிக்கச் செய்ய வேண்டிய புத்தகங்களுள் இது மிக முக்கியமானது.

-தோழமையுடன்...
மு.இராகவேந்திரன், (முன்னாள் மாணவர்)
தலைமை ஒருங்கிணைப்பாளர்,
மாணவர் செயற்களம்,தமிழ்நாடு.



ஓவியம் : இரா. அஜய் கண்ணன், XII A1

## நூல் மதிப்புரை

நூல் பெயர் :புனித வின்சென்ட் தே பவுல் பிறரன்புப் பணிகளின் தந்தை

நூலாசிரியர் : முனைவர் அ.மைக்கேல் குருஸ்

வெளியீடு : ஆனந்தா பதிப்பகம்

பக்கங்கள் : 136

விலை : ரூ.60

நூல் கிடைக்குமிடம் :புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர்

தொடர்புக்கு : 0091 9943570083

உலகெங்கிலும் சமூக நலப்பணிகளை சாதி-மத பேதமின்றி தொடர்ந்து தொய்வின்றி ஆற்றி வருகின்ற புனித வின்சென்ட் தே பவுல் சபையின் முன்னோடியான புனித வின்சென்ட் தே பவுல் பற்றியும், சபை பற்றியும் விரிவான நூலாக வெளிவந்துள்ளது 'புனித வின்சென்ட் தே பவுல் பிறரன்புப் பணிகளின் தந்தை' என்னும் நூல்.

புனிதரின் இளமை இறைப்பணித் தொடக்கம், உரோமைப் பயணம், பிறரன்புப் பணிக்கு அர்ப்பணம், வேத போதக சபை, அன்புப் பணி சபைகள் உருவாக்கம், மனித மறுவாழ்வு மையங்கள், உரோமையில் பாப்புலர் மிஷன், அகிலமெங்கும் அன்புப் பணிகள், முதுமைப் பணிகளும் முத்தி பெற்றதும், புனிதரின் சிறப்புகள். அன்பு மொழிகள், புனித வின்சென்ட் தே பவுல் சபை வரலாறு, புனிதரின் வழியில் இன்றைய வின்செந்தியம், வின்செந்தியரின் செபங்கள் என்னும் பத்து பகுதிகளையும், நூலின் நிறைவுப் பகுதியில் பிற்சேர்க்கையாக சபையின் நிறுவுநர் அருளாளர் பிரடரிக் ஓசானாம் வாழ்வியல், புனித அருளானந்தர் திருத்தலக் குறிப்புகள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

புனித வின்சென்ட் தே பவுல் பற்றியும், வின்சென்ட் தே பவுல் சபை குறித்தும் தமிழில் வெளியாகியுள்ள முழுமையான முதல் நூலென்று பதிப்புரையில் பதிப்பாசிரியர் முனைவர் அ. சிரில் சே.ச. அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ளவாறே முழுமையான விளக்கமான நூலாக இந்நூலைப் படைத்தளித்துள்ளார் எழுத்தாளர் முனைவர் அ.மைக்கேல் குருஸ்.

புனித வின்சென்ட் தே பவுலின் வாழ்வில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வுகளையும், கடந்துவந்த இடர்களையும், துயர்களையும், அவற்றை இறை நம்பிக்கையால் எதிர்கொண்டு வென்ற வாழ்க்கைப் பயணத்தையும் மிகச் சிறப்பாகத் தம் நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். வின்சென்ட் தே பவுல் அடிமையாக விற்கப்பட்டு அனுபவித்த கொடுமைகளைப் படிப்போர் உள்ளம் உருக உயிரோட்டமாய் எழுதியுள்ளார்.

புனிதரின் பணி வாழ்வில் அன்பு, எளிமை, இரக்கம், இறைநம்பிக்கை ஆகிய உயர்பண்புகளோடு வாழ்ந்து பிறரையும் அப்பாதையில் வழிநடத்தி தம் சிந்தனைகளை உலகெங்கிலும் கிளைபரப்பி ஆழ வேரூன்றிய வின்செந்தியத்தின் பெருமைகளை அழகாக அடுக்கிக் காட்டியிருக்கிறார்.

வின்செந்தியர்கள் மட்டுமல்லாது ஒவ்வொருவரும் படித்து, மனதில் பதித்து, தங்களைப் பண்படுத்திக் கொள்வதற்குரிய ஆன்ம வழிகாட்டி நூலாகவும் இந்நூல் திகழ்கிறது என்பதற்கு இருவேறு கருத்திற்கு இடமில்லை.

வேத போதக சபை, பெண்கள் அன்புப் பணி சங்கம், சேவையின் மகளிர் சபை, புனித வின்சென்ட் தே பவுலின் சகோதரிகள், குழந்தைகள் காப்பகம், சீர்திருத்தப்பள்ளி, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு மையம் ஆகிய ஆன்மீக சமூக நற்பணி அமைப்புகள் பலவற்றைத் தொடங்கி திட்டங்களை வகுத்து மிகச்சிறப்பாகச் செயலாற்றினார் புனித வின்சென்ட் தே பவுல் என்பதையும்,

'ஏழைகளின் தந்தை' எனவும் 'இரக்கச் செயல்களின் பாதுகாவலர்' எனவும் அவர் அழைக்கப்படுவதற்கான காரணங்கள் என்னென்னவென்பதையும் சுவைபட எழுதியுள்ளார் நூலாசிரியர்.

நூல் முழுக்க தமிழிலக்கிய மேற்கோள்களும், பொன்மொழிகளும், பழமொழிகளும் விரவிக் காணப்படுகின்றன. இவை நூலாசிரியரின் ஆழ்ந்தகன்ற தமிழ்ப்புலமைக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

நூலின் பிற்பகுதியில் பிறரன்புச் சபையின் தோற்றம், வளர்ச்சி, உலக நாடுகளில் கிளைச்சபைகள், உலகமகாசபைக் கூட்டங்கள், பெண்கள், இளைஞர்களின் பங்கு, புனிதரின் வழியில் இன்றைய வின்செந்திய சபைகளின் பணிகள், செயல்பாடுகள், செயல்திட்டங்கள், ஊடகங்கள், சபையின் நடைமுறை கட்டமைப்புகள், கிளைச்சபை, வட்டாரசபை, மத்திய-மண்டல-தேசிய-உலகமகாசபை பன்னாட்டு கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகள், வின்செந்தியரின் செபங்கள், உறுதிமொழி, கிளைச்சபை கூட்ட நிகழ்ச்சி நிரல் ஆகியன விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் ஒவ்வொரு வின்செந்தியர் மட்டுமல்ல பொதுநிலையினர் வீடுகளிலும் இருக்க வேண்டிய கையேடு.

**- முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல்ராஜ்,**

**பட்டதாரித் தமிழாசிரியர்.**

## தே பிரித்தோ பள்ளியில் இஞ்ஞாசியார்-500 தொடக்கவிழா

இயேசுசபை நிறுவனரான துய இஞ்ஞாசியார் மனமாற்றம் அடைந்த 500 ஆவது ஆண்டினை உலகெங்கிலும் இயேசு சபையினர் கொண்டாடிவருகின்றனர்.அவ்வகையில் தேவகோட்டை தே பிரித்தோ மேனிலைப்பள்ளியின் நிர்வாக அருட்தந்தையர், ஆசிரிய-அலுவலகப் பெருமக்கள் இணைந்து மே-20 வியாழக்கிழமையன்று இணையவழியில் இஞ்ஞாசியார்-500 தொடக்க விழாவைச் சிறப்பித்தனர்.

விழா ஒருங்கிணைப்பாளர் அருட்சகோ.சாலமோன் ஜோசப் பிரவீன் சே.ச அவர்கள் வரவேற்றார். துய இஞ்ஞாசியாரின் வாழ்க்கை வரலாறும் வழிபாட்டுப் பாடல்களும் காணொளியாக ஒளிபரப்பப்பட்டன. தே பிரித்தோ மேனிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் அருட்திரு.பெ.ஆரோக்கியசாமி சே.ச அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றி தூய இஞ்ஞாசியாரின் மதிப்பீடுகளை வாழ்வாக்கிட வாழ்த்துரை வழங்கினார். கொரோனா பேரிடரிலிருந்து மனித இனம் மீளவும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் முழுநலம் பெறவும் ஊரடங்கால் பொருளாதாரப் பாதிப்பிற்கும் மனச்சுமைக்கும் உள்ளானவர்களுக்கு பொருள்வளமும், உடல்-மன நலன் கிடைக்கவேண்டியும் தே பிரித்தோ பள்ளி குழுமத்தினர் அனைவரும் இணைந்து செபித்தனர். நிறைவில் பள்ளியின் அதிபர் மற்றும் தாளாளர் அருட்திரு.ம.வின்சென்ட் அமல்ராஜ் சே.ச அவர்கள் நற்கருணை ஆசீர் வழங்கினார். கூகுள்மீட் செயலி வழி நடைபெற்ற இந்நிகழ்வில் அனைவரும் முழு ஈடுபாட்டுடனும் பக்தியுடனும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். தொடக்க விழா இறையாசீருடன் இனிதே நிறைவு பெற்றது.



## உலகசாதனைத் தொடர் நிகழ்வில் "இஞ்ஞாசியார்-500" படைப்பரங்கம்

தேனமுதத் தமிழ் மக்கள் நல அறக்கட்டளை, தில்லி கலை இலக்கியப் பேரவை, தமிழ் அமெரிக்கா தொலைக்காட்சி, **India Book of Records** ஆகிய நிறுவனங்கள் உலகளாவிய இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து நடத்திய 720 மணிநேரத் தொடர் உலகசாதனை நிகழ்வில் 03.06.2021 வியாழக்கிழமையன்று தே பிரித்தோ மேனிலைப்பள்ளியின் வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றம் "இஞ்ஞாசியார்-500" ஆண்டினைச் சிறப்பிக்கும் விதத்தில் பள்ளி மாணவர்களுக்கான படைப்பரங்க நிகழ்வை **Zoom** செயலிவழி இணையவழியில் நடத்தியது.

படைப்பரங்க நிகழ்வில் தே பிரித்தோ மேனிலைப்பள்ளியின் தலைமையாசிரியரும் வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றத் தலைவருமாகிய அருட்திரு.பெ.ஆரோக்கியசாமி சே.ச அவர்கள் தம் தலைமையுரையில் "இஞ்ஞாசியார்-500" ஆண்டின் நோக்கத்தையும் தூய இஞ்ஞாசியாரின் வாழ்க்கைச் சுவடுகளைப் பகிர்ந்துகொண்டார். தூய இஞ்ஞாசியாரின் மதிப்பீடுகள் இன்றைய இளையோர்க்குத் தேவைப்படும் விதம் குறித்துப் பேசி படைப்பரங்கத்தைத் தொடங்கிவைத்து மாணவப் படைப்பாளர்களை வாழ்த்தினார். கதைசொல்லல், பேச்சு, நூல் மதிப்புரை, பாடல், ஓவியக்கண்காட்சி என மாணவப் படைப்பாளர்கள் படைப்புகளைச் சிறப்பாக அரங்கேற்றிப் பாராட்டு பெற்றனர். தேவகோட்டை தே பிரித்தோ மேனிலைப்பள்ளி, தூய மரியன்னை பெண்கள் மேனிலைப்பள்ளி, குழந்தை இயேசு மெட்ரிக் மேனிலைப்பள்ளி, லோட்டஸ் ஏ.என்.வெங்கடாசலம் செட்டியார் பள்ளி, காரைக்குடி தி லீடர்ஸ் அகாதமி, மாத்தூர் தூய நன்னெஞ்சம் சிபிஎஸ்இ பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவப் படைப்பாளர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். படைப்பரங்க நிகழ்வை வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ் ஒருங்கிணைத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.படைப்பரங்க நிகழ்வில் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் பார்வையாளர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.










ஓவியம் : பாலாஜி  , XII E





ஓவியம் : ஜா.பெர்னால்டு ஜார்ஜ்ராஜ் , முன்னாள் மாணவர்



ஓவியம் : பூண்டி ஜெயராஜ், ஓவிய ஆசிரியர்



ஓவியம் : இரா. அஜய் கண்ணன் XII A1



ஓவியம் : ஜா.பெர்னால்டு ஜார்ஜ்ராஜ் , முன்னாள் மாணவர்



ஓவியம் :ம.ஹரிஹரன், முன்னாள் மாணவர்

அட்டைப்பட ஓவியம் வரைந்த எம் பள்ளி மாணவன் இரா.அஜய் கண்ணன் அவர்களுக்கு எமது இதயப்பூர்வமான நன்றிகள்

**Published by**
The Management,
De Britto Hr Sec School,
Devakottai.

**visit us at**
www.debrittohssdvk.org
please send your feedback to
debrittodvk@gmail.com

